# COLLEGE TRB

# தமிழ்

2024-2025



TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

*Your Success is Our Goal...*

## UNIT-1

# பழந்தமிழ் இலக்கியங்கள்

tcaexamguide@gmail.com
Teachers Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide

9360268118
7639967359
6369036346
9566535080

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

# தமிழ்

## அலகு - 1

## பழந்தமிழ் இலக்கியங்கள்



**COMPETITIVE EXAM**
**FOR**
**ASSISTANT PROFESSOR TRB 2024 - 25**

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118


## அலகு - 1

## பழந்தமிழ் இலக்கியங்கள்


| S.NO | INDEX | PAGE NO |
|---|---|---|
| 1.1 | எட்டுத்தொகை | 1 |
| 1.1.1 | நற்றிணை | 3 |
| 1.1.2 | குறுந்தொகை | 10 |
| 1.1.3 | ஐங்குறுநூறு | 20 |
| 1.1.4 | பதிற்றுப்பத்து | 29 |
| 1.1.5 | பரிபாடல் | 43 |
| 1.1.6 | கலித்தொகை | 62 |
| 1.1.7 | அகநானூறு | 73 |
| 1.1.8 | புறநானூறு | 88 |
| 1.2 | பத்துப்பாட்டு | 124 |
| 1.2.1 | திருமுருகாற்றுப்படை | 127 |
| 1.2.2 | பொருநராற்றுப்படை | 134 |
| 1.2.3 | சிறுபாண் ஆற்றுப்படை | 147 |
| 1.2.4 | பெரும்பாணாற்றுப்படை | 156 |
| 1.2.5 | முல்லைப்பாட்டு | 165 |
| 1.2.6 | மதுரைக்காஞ்சி | 176 |
| 1.2.7 | நெடுநல்வாடை | 190 |
| 1.2.8 | குறிஞ்சிப்பாட்டு | 204 |

| | | |
|---|---|---|
| 1.2.9 | பட்டினப்பாலை | 121 |
| 1.2.10 | மலைபடுகடாம் | 222 |
| 1.3 | பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் | 243 |
| 1.3.1 | நாலடியார் | 245 |
| 1.3.2 | நான்மணிக்கடிகை | 256 |
| 1.3.3 | இன்னா நாற்பது | 265 |
| 1.3.4 | இனியவை நாற்பது | 268 |
| 1.3.5 | திருக்குறள் | 278 |
| 1.3.6 | கார் நாற்பது | 291 |
| 1.3.7 | களவழி நாற்பது | 293 |
| 1.3.8 | ஐந்திணை ஐம்பது | 299 |
| 1.3.9 | ஐந்திணை எழுபது | 302 |
| 1.3.10 | திணைமொழி ஐம்பது | 308 |
| 1.3.11 | திணைமாலை நூற்றைம்பது | 311 |
| 1.3.12 | கைந்நிலை | 315 |
| 1.3.13 | திரிகடுகம் | 319 |
| 1.3.14 | ஆசாரக்கோவை | 324 |
| 1.3.15 | பழமொழி நானூறு | 335 |
| 1.3.16 | சிறுபஞ்சமூலம் | 337 |
| 1.3.17 | முதுமொழிக் காஞ்சி | 339 |
| 1.3.18 | ஏலாதி | 347 |


TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359** **Salem: 93602 68118**


## அலகு - 1

## பழந்தமிழ் இலக்கியங்கள்

### 1.1 எட்டுத்தொகை

- எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய தொகுப்பு நூல்களையே சங்க இலக்கியங்கள் என்று கூறுவர் இவற்றை சுருக்கமாக பாட்டும் தொகையும் என்றும் கூறுவர் சங்க இலக்கியங்களை சான்றோர் செய்யுட்கள் என முதன்முதலில் குறிப்பிட்டவர் பேராசிரியர். பாடல்களை பகுத்து தொகுப்பதற்கு பொருண்மை, அடியளவு, யாப்பு, தொழில், எண்ணிக்கை ஆகியவை அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. அவ்வாறு தொகுக்கப்பட்ட எட்டு தொகையும் பத்துப்பாட்டும் பதினெண்மேற்கணக்கு என்று பெயர்பெறும். கணக்கு என்பது பாட்டு அல்லது நூல் என்றும் மேற்கணக்கு என்பது மிகுந்த அடி எண்ணிக்கை கொண்ட பாட்டு என்றும் பொருள் படும்.
- எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் இடம்பெற்றுள்ள பாடல்கள் 2352 கடவுள் வாழ்த்துக்களையும் சேர்த்து மொத்தம் 2368
- அவை 3 அடி முதல் 782 (மதுரைக்காஞ்சி) அடிவரையால் ஆனது.
- சங்க பாடல்களை எழுதியவருள் 470 பேருக்கு இயற்பெயர் கூறப்பட்டுள்ளது.
- ஆசிரியர் பெயர் தெரியாத பாடல்களின் எண்ணிக்கை 102.
- பாடல் இயற்றுயோருள் பெண்பாற்புலவர்கள் 30 பேர்
- அரசர்கள் 25 பேர்
- எட்டுத்தொகை நூலில் கலித்தொகை பரிபாடல் ஆகிய இரு நூல்கள் தவிர பிற தொகை நூல்கள் ஆசிரியப் பாவால் (அகவற்பா) இயற்றப்பட்டவை ஆகும்.
- எட்டுத்தொகைக்கு **எண் பெருந்தொகை** என்றும் பெயர் .
- எட்டுத்தொகை நூல்கள் இவை என்பதை கூறும் பழம் பாடல் ஒன்று வழங்குகிறது.

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம்என்று**
**இத்திறத்த எட்டு தொகை"**

**சங்க நூல்கள் முதன் முதலில் அச்சான விவரங்கள்**

| **நூல்** | **பதிப்பித்தவர்** | **அச்சான ஆண்டு** |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | ஆறுமுகநாவலர் | 1951 |
| கலித்தொகை | சி வை தாமோதரம் பிள்ளை | 1887 |
| பத்துப்பாட்டு **(NTA MAR - 2023)** | உ.வே. சாமிநாதையர் | 1889 |
| புறநானூறு | உ.வே.சா | 1894 |
| ஐங்குறுநூறு | உ.வே.சா | 1903 |
| பதிற்றுப்பத்து | உ.வே.சா | 1904 |
| பட்டினப்பாலை **(NTA MAR -2023)** | மறைமலைஅடிகள் | 1906 |
| பொருநராற்றுப்படை | வா. மகாதேவமுதலியார் | 1907 |
| குறுந்தொகை | சவுரி பெருமாள் அரங்கனார் | 1915 |
| நற்றிணை | பின்னத்தூர் நாராயண சுவாமி அய்யர் | 1915 |
| பரிபாடல் **(NTA MAR - 2023)** | உ.வே.சா | 1918 |
| அகநானூறு | ராகவ ஐயங்கார் | 1918 |

**எட்டுத்தொகை நூல்கள்**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**அக நூல்கள்**

- அகப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட நூல்கள் ஐந்து. அவை,
- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- கலித்தொகை
- அகநானூறு ஆகும்

**புற நூல்கள்**

- பதிற்றுப்பத்து
- புறநானூறு
- என்பன புறப்பொருள் பற்றி அமைவன

**அக புற நூல்கள்**

- பரிபாடல்

TEACHER'S CARE ACADEMY

### 1.1.1. நற்றிணை

- நற்றிணை ஆசிரியர் பாவால் எழுதப்பட்ட நூல் அகம் சார்ந்த நூல்.
- இதில் 400 + 1 பாடல்கள் இடம் பெற்றுள்ளது
- இந்த நூலை 175 பேர் பாடி இருக்கிறார்கள்.
- இந்த நூலின் அடி வரையறை 9 முதல் 12 வரை
- நற்றிணையில் 110 ஆம் பாடலும் 379 ஆம் பாடலும் 12 அடிகளுக்கு மேல் உள்ளன.
- இவை இரண்டும் 13 அடி பாடல்களாக உள்ளன.
- 234 ஆம் பாடல் முழுமையும் கிடைக்கவில்லை.
- இந்த நூலை தொகுத்தவர் யார் என்பது தெரியவில்லை.
- தொகுப்பித்தவர் **பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. (NET – JAN– 2016)**
- நற்றிணை நூலுக்கு உரை எழுதியவர் **பின்னத்தூர் நாராயண சுவாமி அய்யர் மற்றும் ஔவை துரைசாமி பிள்ளை.**
- பதிப்பித்தவர் **பின்னத்தூர் நாராயண சுவாமி ஐயர்** என்பவர் ஆவார்.
- இதன் வேறு பெயர் '**நற்றிணை 400'**
- நல் + திணை =நற்றிணை. திணை என்ற சொல் அகப்பொருள் கூறும் நூல்களுக்கு அமைந்த பெயராகும். திணை என்ற பெயரோடு இந்நூலுக்கு நல் என்னும் அடைமொழியும் சேர்ந்து வழங்குகிறது.

**நற்றிணை பாடிய புலவர்கள்**

- இந்த நூலை 175 பேர் பாடி இருக்கிறார்கள். பெயர் தெரியாத புலவர்களுக்கு அவர்கள் பாடிய பாடல்களில் அமைந்துள்ள சிறந்த தொடர்களால் பெயர் சூட்டி உள்ளனர். **வண்ணப்புறக்கரந்தனார், மலையனார், தனிமகனார் விழிகட் பேதை பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார், தேய்புரி பழங்கயிற்றினார், (UGC — NET - 2009)**
- **மடல் பாடிய மாதங்கீரனார்** என தொடர் பெயரால் பெயர் பெற்ற **ஒன்பது** புலவர்கள் இதில் இடம்பெற்றுள்ளனர்.
- அறிவுடை நம்பி, உக்கிர பெருவழுதி, பாலை பாடிய பெருங்கடுங்கோ போன்ற அரசர்களும் நற்றிணை பாடல்களைப் பாடியுள்ளனர். அதியமான் அஞ்சி, அழிசி, ஆய் அண்டிரன், உதியன், ஓரி(6), காரி, குட்டுவன், சேந்தன், நன்னன், தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் ஆகிய வேந்தர்களும் குறுநில மன்னர்களும் நற்றிணையில் குறிப்பிடப் பெற்றுள்ளனர். அறவாழ்வு, கொடை, ஆட்சித்திறம், பழக்கவழக்கங்கள் போன்ற சமூக வரலாற்றுச் செய்திகளும் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன.

**நற்றிணையில் இடம்பெறும் சிறப்பு செய்திகள்**

- தலைவன் பிரிந்து சென்ற நாளை கணக்கிட தலைவி சுவரில் கோடிட்டு எண்ணுதல் (பாடல் எண் – 324)

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- பல்லி ஒலித்தல் கொண்டு சகுனம் அறிதல்
- மகளிர் தை நீராடி நோன்பு நோற்றல்
- மகளிர் கால்பந்து விளையாடுதல் போன்ற சிறப்புச் செய்திகள் நற்றிணையில் இடம் பெற்றுள்ளன.
- குருகு, கிளி, நாரை போன்ற அஃறிணை உயிர்களை தூதுவிடும் பாடல்களும் நற்றிணையில் உள்ளன.
- கண்ணகியின் வாழ்க்கையோடு ஒத்த திருமா உண்ணியின் வரலாற்றினை,

**"ஏதிலாளன் கவலை கவற்ற**
**ஒருமுலை இழந்த திருமா உண்ணி "**

- என்று மதுரை மருதன் இள நாகனார் பாடிய பாடல் கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை கூறுகிறது.
- சகடம் என்ற சொல்லில் ச எழுத்தினை முதலில் கொண்டு அமைந்த அரிய சங்க சொல் அமைந்த நூல் நற்றிணை.

**"கணநிறை கிளர்க்கும் நெடுநெறி**
**சகடம் மணல் மடுத்து"**

- என்ற பாடலில் சகரம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பகைவரை வென்று அவர் வாய்பல்லை கொண்டு வந்து தம் கோட்டை கதவில் அழுத்தக்கூடிய செய்தியினை பொய்கையார் தன்னுடைய பாலைதிணை பாடலில் பாடியுள்ளார்.

**"------------------------------------ மூவன்**
**முழு வலி முள் எயிறு அழுத்திய கதவின்**
**கானல்அம் தொண்டி பொருநன்"** (பாடல் எண் 18)

- குறவர் மின்மினியை விளக்காகக் கொண்டு மழையின் இயக்கம் அறிவர். இதனை,

**"பல் மர உயர்சினை மின்மினி விளக்கத்து,**
**செல் மழை இயக்கம் காணும்**
**நல் மலை நாடன்" "**(பாடல் எண் 44)

- என்ற பெருங்கௌசிகனார் பாடலின் மூலம் அறியலாம்.
- மகளிர் தம் வாழ்க்கை நிலை அறிய விரிச்சி கேட்பர். அவ்விரிச்சியில் பெற்ற மொழி நன் மொழியாக இருக்கும் பொழுது அம்மொழியை கூறுபவர்களை நீண்ட நாள் வாழ்வாயாக என வாழ்த்துவர். இதனை,

**"அமுதம் உண்க நம் அயல் இலாட்டி**
**கிடங்கில் அன்ன இட்டுக் கரை கான்யாற்று"** (பாடல் எண் 65)

- என்ற கபிலரின் குறிஞ்சித் திணை பாடலின் மூலமாக அறியலாம்.
- பல்லி ஒலிப்பதனை நிமித்தம் கூறுவதாக கருதுவதனை நற்றிணையில் இடம்பெறும் பாடல் மூலமாக அறியலாம். இதனை,

**"முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்**
**வருவம் என்னும் பருவரல் தீர,**
**படும்கொல் வாழி நெடு சுவர் பல்லி"**

(பாடல் எண் 169)

- என்ற முல்லைத்திணை பாடல் மூலமாக அறியலாம்.
- ஆய்அண்டிரன் இரவலர்க்கு யானையை பரிசாக அளித்தான் என்பதனை,

**"இரவலர் வரூஉம் அளவை, அண்டிரன்**
**புரவு எதிர்ந்து தொகுத்த யானை போல"** (பாடல் எண் 237)

- என்ற காரிக்கண்ணனாரின் பாலைத்திணை பாடலின் மூலமாக அறியலாம்.
- நற்றிணையில் தலைவன் மடல் ஏறுதல் குறித்து மோசிகீரனார் நெய்தல் திணைப்பாடலில் பாடியுள்ளார். இதனை,

**" மா என மதித்துமடல் ஊர்ந்து ஆங்கு**
**மதில் என மதித்து வெண் தேர் எறி"** (பாடல் எண் 342)

- என்ற பாடல் வரிகளின் மூலமாக அறியலாம் .
- ஆலமரம் கடவுளோடு இணைந்து பேசப்படுவதை நற்றிணையில் கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனாரின் பாலைத்திணை பாடல் மூலமாக அறியலாம். அதாவது கடவுள் வாழும் ஆலமரம். அங்கு கடவுளுக்கு படைத்து வைத்த பலி உணவை காக்கைகள் வந்து உண்ணும் என்பதன் மூலம் அறியலாம். இதனை,

**"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து**
**உகு பழி அருந்திய தொகு விரற் காக்கை**
**புன்கண் அந்திக் கிளைவயின் செறிய"** (பாடல் எண் 343)

- என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம் .
- "நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" இந்த பாடல் வரி விருந்தோம்பலின் சிறப்பை கூறுகிறது.**(NET –JUNE -2012)**
- நீர் எவ்வாறு உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததோ அவ்வாறே தலைவி உயிருடன் இயங்குவதற்குத் தலைவனது அருள் தோய்ந்த காதல் நெஞ்சம் இன்றியமையாததாகும்.

**"நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நத்தயத் தருனி"**

- மேலும், மனைவி இரவில் விருந்தினர் வந்தாலும் மனைவி கணவனுடன் மனமகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்து படைக்கும் செய்தி,

**அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"**

- என்னும் பகுதியால் அறியலாகும்.

**"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

**நாகரிகம் வேண்டு பவர்'**

- என்னும் குறட்பாவின் கருத்து,

**"முந்தை விருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிதா கரிகர்"**

- என்ற பாடலில் புலப்படுகிறது.
- செல்லம் எது? என்பதனை எத்துணை அழகுபடி மொழிகிறது ஒரு பாடல். பிறர் நம்மைச் சிறப்பித்துக் கூறும் புகழுரைகளோ விரைந்து செல்லும் சிறப்புமிக்க ஊர்திகளோ செல்வம் அவை அவரவர் செய்த நல்வினையின் இம்மைப் பயன் சான்றோர் செல்வமெனச் செப்புவது தன்னைச் சார்ந்தோர் மனம் புண்படுத்தாத - அவர்கள் துள்பம் கண்டு நெஞ்சம் நெக்குருகும் தன்மையேயாம் என இலக்கணம் வகுக்கும் பாடல்,

**"நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்,**
**செல்வம் அன்று, தன் செய்வினைப் பயனே:**
**சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே" (210)**

- ஓரறிவுயிர்களிடத்தும் உறவு கொள்ளும் -உலகத்துயிர்களிடத்தெல்லாம் அன்பு செலுத்தும் ஒண்மை உணர்த்துகிறது.
- தோழி எவ்வளவு கூறியும் தலைவி தலைவன் மேற்கொண்ட சீற்றம் தணிந்திலள். அதனால் மனம் வருந்திய தோழியின் கூற்றாகக் கபிலர் பாடிய பாடல் இது.

**"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்**
**வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி**
**அம்மலை கிழவோன் நம்நயந்தென்றும்**
**வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்**
**நீயுங் கண்டு நுமரொடும் எண்ணி**
**அறிவறிந்து அளவல் வேண்டும் மறுதரற்கு**
**அரிய வாழி தோழி! பெரியோர்.**
**நாடி நட்பின் அல்லது**
**நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே." (32)**

- திருமாலைப் போன்ற கரிய மலைத்தொடர் பலதேவளைப் போன்ற வெள்ளருவி! அம் மலைநாடன் நம்மை விரும்பி வருந்துகிறான் என யான் எவ்வளவு கூறியும் நீ என் பேச்சை ஏற்றுக் கொள்ளவில்லை. நீயாகச் சிந்தித்துப்பார். அல்லது உனக்கு மிக வேண்டியவர்களுடன் கலந்து எண்ணிப்பார். அறியவேண்டியதை அறிந்து அவனை ஏற்றுக்கொள்வதே நலம் மறுப்பது தவறு.
- பெரியவர்கள் ஆராய்ந்த பின் நட்புக் கொள்வார்களே, தவிர நட்புக் கொண்ட பின் ஆராயமாட்டார்கள்.

- எவ்வளவு நயமாக, நாவன்மை மிக்க தோழி தலைவியை இடித்துக் கூறுகிறாள் என்பதைப் பாட்டினைப் பல முறை படித்து உணர்தல் வேண்டும். திருவள்ளுவர்,

**"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**
**வீடில்லை நட்பாள் பவர்க்கு"**(791)

- எனக்கூறுவது, இப்பாடலின் இறுதியில் பொருத்தமுற ஆளப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது.
- தலைவன் தன் காதலியை அவள் வீட்டுக்கருகிலுள்ள ஒரு புன்னை மரத்தடியில் சந்தித்தான். அவள் "இது நாங்கள் விளையாடுகிற பொழுது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்து வளர்ந்தது. பிறகு நாங்கள் அதனைப் பாலும் தேனும் பெய்து வளர்த்தோம். அப்போதெல்லாம் எங்கள் தாய் உங்களை விட உங்கள் தங்கையான புன்னை மிக நல்லவள்.
- அவள் அடமே செய்வதில்லை, எனப் பாராட்டுவாள். எனவே என் உடன் பிறப்பனைய இப்புன்னை நிழலில் உங்களுடன் அளவளாவ எனக்குக் கூச்சமாக இருக்கிறது. வேறு இடங்களும் அருகிலுள நாம் அங்கே போய்ப் பேசிக் கொண்டிருப்போம் என்கிறாள். இயற்கையையும் உயிருள்ளதாகக் கருதி நாணும் இந்நுட்பமான உணர்வு நிலையை நாம் சங்கப்பாடல்களில் கண்டு மகிழலாம்.

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள், புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே!..."(172)**

- தலைவன் பிரிவால் தலைவி உயிர் துறத்தற்கு அஞ்சவில்லை; ஆனால், மறுபிறப்பில் மறந்து விடுவேனோ!' என்று கலங்குகின்றாள்.

**"சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில்**
**பிறப்புப்பிறி தாகுவது ஆயின்**
**மறக்குவேன் கொல்என் காதலன் எனவே"**

- தலைவன் பிரிந்த நாளைத் தலைவி சுவரிலே கோடிட்டு எண்ணுவதும், பல்லி காதலர் வரவைக் கூறுவதாக நம்புவதும். காற்பந்து விளையாடுவதும் மகளிர் வாழ்விலே காண்கிறோம். இரும்பு காய்ச்சிய உலையிலே கொல்லன் பனை மடலில் உள்ள நீர் தெளித்து நெருப்பை அணைப்பது முதலான செய்திகளையும் அறிகிறோம்.

**பண்கள் பற்றிய குறிப்பு**

**ஆம்பல் பண்**

- ஆம்பல் பண் குழலின் வழி இனிது வெளிப்படும் என்று பல குறிப்புகள் வாயிலாக அறிய முடிகிறது.

TEACHER'S CARE ACADEMY

**"ஆம்பலங் குழலின் ஏங்கி"**

**(நற்றிணை : 123 : 10)**

- 'ஏங்கி' என்ற நற்றிணைப் பாடலின் சொல் ஏக்க உணர்வைக் காட்டுவதாகத் தோன்றுகிறது. இந்தப் பண்ணில் ஏக்க உணர்வைக் காட்டலாம் என்று தெரிகிறது. சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை ஓர் ஏக்க உணர்வுப் பாடல். அதில் ஆம்பலங் குழல் இடம் பெறுகிறது. அதை இங்கு இணைத்துக் காணலாம். அங்கு அது ஆம்பல குழலைக் குறிப்பிட்டாலும் அதிலிருந்து வெளிப்படும் பண்ணும் ஆம்பலாக இருக்கலாம் என்று கருதுவதில் தவறில்லை.

**குறிஞ்சிப்பண்**

- மலைப் பாங்கான இடங்களில் நள்ளிரவு நேரம் குறிஞ்சி பாடுவதாகக் கூறப்படுகிறது. இவை அச்சம் தரும் இடமும் காலமும் ஆகும். நள்ளிரவு காலம், பேயும் உறங்கும் நேரம் அப்பொழுது காப்புடைய நகரில் கானவர் தூங்காது குறிஞ்சி பாடுகின்றனர்.

**'கழுதுகால் கிளர ஊர்மடிந் தன்றே**
**உருகெழு மரபில் குறிஞ்சி பாடிக்**
**கடியுடை வியன்நகர்க் கானவர் துஞ்சார்' நற்றிணை : 255 )**

- இப்பாடலிலும் அச்சவுணர்வின் குறிப்பு தோன்றுவதைக் காணலாம். எட்டுத்தொகை நூற்கள் அன்றி மலைபடுகடாம், திருமுருகாற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் குறிஞ்சிப் பண்ணைக் குறிப்பிடும் இடத்தில் அச்சவுணர்வு காணப்படுகிறது. இவற்றைக் கொண்டு குறிஞ்சிப் பண்ணை அச்சவுணர்வு மிக்கப் பண்ணாகக் கருதலாம்.

**படுமலைப் பண்**

- படுமலைப் பண் உயர் குரலில் பாடும் பண்ணாக இருக்க வேண்டும். மேகத்தின் இடி முழக்கத்துடன் ஒப்புமைப்படுத்தப்படுகிறது. நல்வளம் கொடுக்கும் மழை மேகத்தில் குரல் போன்று யாழில் இசைக்கும் படுமலைப்பண் என்று பெருங்கௌசிகனாரின் நற்றிணைப் பாடல் கூறுகிறது.

**'ஏயினை உரையியரோ பெருங்கலி எழிலி**
**படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு**
**எழீஇ அன்ன உறையினை முடிவின்**
**மண்ணார் கண்ணின் இம்மென இமிரும்' (நற்றிணை : 139 ; 3 - 6 )**

**நற்றிணையில் இடம்பெறும் சில அருஞ்சொற்பொருள்**

| | |
|---|---|
| அதிரல் | காட்டுமல்லி (பாடல் எண் 52) |
| இவுளி | குதிரை (பாடல் எண் 63) |
| அமுதம் உண்க | நீண்ட நாள் வாழ்வாளாக (பாடல் எண் 65) |
| இகுளை | தோழி (பாடல் எண் 71) |
| அதவம் | அத்திப்பழம் (பாடல் எண் 95) |

TEACHER'S CARE ACADEMY

| | |
|---|---|
| குரல் | தினைக்கதிர் (பாடல் எண் 102 |
| அகடு | வயிறு (பாடல் எண் 103) |
| எக்கர் | மணல்மேடு (பாடல் எண் 106) |
| திமில் | படகு (பாடல் எண் 111) |
| இரத்தி | இலந்தை (பாடல் எண் 113) |
| பாணி | தாளம் (பாடல் எண் 132) |
| ஐம்பால் | கூந்தல் (பாடல் எண் 133, 140) |
| உமணர் | உப்பு வணிகர் (பாடல் எண் 138) |
| பிணவுப்புலி | பெண் புலி (பாடல் எண் 144,322) |
| ஊதை | வாடைக்காற்று (பாடல் எண் 163) |
| நுவ்வை | நுன் தங்கை (பாடல் எண் 172) |
| கைதை | தாழை (பாடல் எண் 178) |
| ஓவம் | ஓவியம் (பாடல் எண் 182) |
| இதணம் | பரண் (பாடல் எண் 194) |
| கவுறு | சூதாடும் கருவி (பாடல் எண் 243) |
| வான் பூ | வெள்ளியப்பூ (பாடல் எண் 266) |
| அத்தம் | வழி (பாடல் எண் 316) |
| புருவை | ஆடு (பாடல் எண் 321) |
| குடிஞை | பேராந்தை (பாடல் எண் 394) |

**வினாக்கள்**

**1.திருமுருகாற்றுப்படை அச்சான ஆண்டு எது?**

A) 1951 B) 1887 C)1889 D)1904

**2. நற்றிணையைத் தொகுப்பித்தவர்**

A) கூடலூரர் கிழார் B) பூரிக்கோ

C) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி D) நல்லந்துவனார்

**3. நற்றிணையில் 12 அடிக்கு மேல் உள்ள பாடல்கள் எது?**

A) நூறாவது பாடல் ஐம்பதாவது பாடல் B)110 ஆம் பாடல் 379 ஆம் பாடல்

C) 125 ஆம் பாடல் 345 ஆம் பாடல் D) 220 ஆவது பாடல் 377 வது பாடல்

**4. நல் என்ற அடைமொழி பெற்ற நூல் எது?**

A) குறுந்தொகை B) நற்றிணை C) பரிபாடல் D) ஐங்குறுநூறு

**5. மகளிர் கால்பந்து விளையாடுதல் போன்ற சிறப்புச் செய்தி இடம்பெற்ற நூல் எது?**

A)அகநானூறு B) புறநானூறு C) நற்றிணை D) ஐங்குறுநூறு

**6.“ஏதிலாளன் கவலை கவற்ற ஒருமுலை இழந்த திருமா உண்ணி “என்ற பாடல் வரி இடம்பெற்ற நூல் எது?**

TEACHER'S CARE ACADEMY

A) அகநானூறு B) புறநானூறு C) நற்றிணை D) ஐங்குறுநூறு

**7. சகடம் என்ற சொல்லில் ச எழுத்தினை முதலில் கொண்டு அமைந்த அரிய சங்க சொல் அமைந்த நூல் எது?**

A) அகநானூறு B) புறநானூறு C) நற்றிணை D) ஐங்குறுநூறு

**8. "பல் மர உயர்சினை மின்மினி விளக்கத்து, செல் மழை இயக்கம் காணும் நல் மலை நாடன்" என்று பாடியவர் யார்?**

A) மாங்குடி மருதனார் B) பெருங்கௌசிகனார்

C) பரணர் D) கபிலர்

**9.பல்லி ஒலிப்பதனை நிமித்தம் கூறுவதாக கருதுவதனை கூறும் நூல் எது?**

A) அகநானூறு B) புறநானூறு C) நற்றிணை D) ஐங்குறுநூறு

**10. உறுதிக் கூற்று:" மா என மதித்துமடல் ஊர்ந்து ஆங்கு மதில் என மதித்து வெண் தேர் எறி" என்ற பாடல் வரி நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.**

**காரணக் கூற்று: இதில் தலைவி மடல் ஏறுதல் குறித்து கூறப்பட்டுள்ளது**

A) உறுதிக் கூற்று காரண க்கூற்று: இரண்டும் சரி

B) உறுதிக் கூற்று காரண க்கூற்று: இரண்டும் தவறு

C) உறுதிக் கூற்று: சரி, காரணக் கூற்று: தவறு

D) உறுதிக் கூற்று: தவறு, காரணக் கூற்று: சரி

### 1.1.2. குறுந்தொகை

- தொகை நூலில் முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை.
- உரையாசிரியரால் அதிகமான மேற்கோள் காட்டப்பட்ட நூல் இது.
- **"நல்ல குறுந்தொகை"** என்ற அடைமொழியோடு அழைக்கப்படக்கூடிய நூல் இது.
- இது **'குறுந்தொகை 400'** என்றும் அழைக்கப்படும்.
- 4 முதல் 8 அடி வரையான அடி வரையறையை கொண்டது.
- குறைந்த அடி எண்ணிக்கை பாடல்களை கொண்டமையால் குறுந்தொகை என பெயர் பெற்றது. **(NET – DEC – 2021)**
- பாரதம் பாடிய பெருந்தேவனார் முருகனை வாழ்த்தி பாடிய பாடல் கடவுள் வாழ்த்தாக இடம்பெற்றுள்ளது.
- குறுந்தொகை கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 அகத்திணை பாடல்களைக் கொண்டுள்ளது.
- 307, 391 ஆகிய இரு பாடல்களும் 9 அடி கொண்டுள்ளன.
- இந்நூலை தொகுத்தவர் பூரிக்கோ.**(UGC – NET – JUNE -12)**
- தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை.
- குறுந்தொகையை மொத்தம் 205 பேர் பாடியுள்ளனர்.

TEACHER'S CARE ACADEMY

- குறுந்தொகையின் முதல் 380 பாடல்களுக்கு பேராசிரியரும் பின் 20 பாடல்களுக்கு தாமும் உரை செய்ததாக சிந்தாமணி உரை சிறப்பு பாயிரத்தில் நச்சனார்க்கினியர் குறிப்பிடுவார்.
- ஆனால் இவ்வுரைகள் கிடைக்கவில்லை.
- பிற்காலத்தில் டாக்டர் உவேசா அவர்கள் உரை எழுதியுள்ளார்.
- தி.சௌ. அரங்கசாமி ஐயங்கார் உ. வே. சாமிநாதையர் ஆகியோர் குறுந்தொகையைப் பதிப்பித்தவர் ஆவர்.
- இதன் உரையின் முன்னுரையில் குறுந்தொகை பாடல்களையே உரையாசிரியர்கள் மிகுதியாக எடுத்து காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.
- இதில் முதல் கரு பொருள்களை விட உரிப்பொருள்களுக்கு சிறப்பிடம் தரப்பட்டுள்ளது.
- கொங்குதேர் வாழ்க்கை என்னும் இரண்டாம் பாடல் சிறந்த வரலாற்றுச் சான்றாக அமைந்துள்ளது.

**வரலாற்று குறிப்புகள்**

- சோழன் கரிகால் வளவன், குட்டுவன், திண்டேர் பொறையன் பசும்பொன் பாண்டியன் மற்றும் பாரி ஓரி, நன்னன் போன்ற பல பேரரசர்கள் சிற்றரசர்கள் பற்றிய வரலாற்று குறிப்புகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது. குறிப்பாக பரணர் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் மிகுதி. இந்நூலில் குறிப்பிடப்பெறும் ஊர்கள் **காஞ்சி, மாந்தை, உறையூர், குறும்பூர்** முதலியன. **பறை, பணிலம், பதலை, முழவு, முரசு** முதலிய இசைக்கருவிகளும் **கட்டளைகல், கொல்லிப்பாவை** ஆகியனவும் சுட்டடப்பட்டுள்ளன

**குறுந்தொகை பாடல் பாடிய புலவர்கள்**

- குறுந்தொகை பாடல்களை மொத்தம் 205 பேர் பாடியுள்ளனர். பல பாடல்களுக்கு ஆசிரியர் யார் என்பது அறியப்படவில்லை. ஆனால் அப்பாடல்களில் சிறந்து விளங்கும் தொடர்களின் சிறப்பு நோக்கி அதன் தொடர்களையே ஆசிரியர் பெயராக அமைத்து வழங்கியுள்ளனர். உதாரணமாக,

அணிலாடு முன்றிலார்,
செம்புலப் பெயல்நீரார்,
குப்பை கோழியார்,
விட்டக்குதிரையார்
மீனெறிதூண்டிலார்
கயமனார்
நெடுவெண்ணிலவினார்
ஓர் ஏர் உழவனார்
கூவன் மைந்தன்
காலெரி கடிகையார்
ஓரிற்பிச்சையார்

கல்பொருசிறுநுரையார்
கள்ளிலாத் திரையினார்
பதடிவைகலார்
கவைமகன்
வில்லக விரலினார்
கங்குல் வெள்ளத்தார்
குறியிறையார்

TEACHER'S CARE ACADEMY

# COLLEGE TRB

# தமிழ்

2024-2025



TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

*Your Success is Our Goal...*

## UNIT-2

# காப்பியங்கள்

tcaexamguide@gmail.com

Teachers Care Academy

www.tcaexamguide.com

tcaexamguide

9360268118
7639967359
6369036346
9566535080

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## அலகு – II

## காப்பியங்கள்



**COMPETITIVE EXAM**

**FOR**

**ASSISTANT PROFESSOR TRB 2024 - 25**

**INDEX**


| | அலகு - 2 | P.N. |
|---|---|---|
| | **2.1. பெருங்காப்பியங்கள்** | 3 |
| | 2.1.1. சிலப்பதிகாரம் | 6 |
| | 2.1.2 மணிமேகலை | 32 |
| | 2.1.3 இரட்டை காப்பியங்கள் | 44 |
| | 2.1.4 சீவகசிந்தாமணி | 46 |
| | 2.1.5 வளையாபதி | 57 |
| | 2.1.6 குண்டலகேசி | 60 |
| | **2.2. ஐஞ்சிறுகாப்பியங்கள்** | 63 |
| | 2.2.1 உதயணகுமார காவியம் | 64 |
| | 2.2.2 நாககுமார காவியம் | 66 |
| | 2.2.3 யசோதர காவியம் | 72 |
| | 2.2.4 சூளாமணி | 77 |
| | 2.2.5. நீலகேசி | 82 |
| | **2.3 பிற்கால காப்பியங்கள்** | 82 |
| | 2.3.1 கம்பராமாயணம் | 84 |
| | 2.3.2 பெரியபுராணம் | 95 |
| | 2.3.3 திருவிளையாடற்புராணம் | 99 |
| | 2.3.4 வில்லிபாரதம் | 103 |
| | 2.3.5 பெருங்கதை | 107 |
| | 2.3.6 நளவெண்பா | 114 |
| | 2.3. 7. தேம்பாவணி | 118 |
| | 2. 3. 8. இரட்சணிய யாத்திரிகம் | 124 |
| | 2. 3. 9 சீறாப்புராணம் | 133 |
| | 2. 3.10 இயேசுகாவியம் | 139 |
| | 2. 3.11 நாயகம் ஒரு காவியம் | 143 |
| | 2. 3.12 இராவண காவியம் | 147 |

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE:** NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy: 76399 67359 Salem: 93602 68118


# COLLEGE TRB – TAMIL – 2024 -25

## அலகு – 2

## காப்பியங்கள்

**காப்பியம்**

- காப்பு + இயம் = காப்பியம். பழைய மரபுகளைக் குறிப்பாக இலக்கண மரபுகளைக் காத்து நிற்பது காப்பியம்.
- காப்பியம் நன்மையை நோக்கி வளர வேண்டும்.
- இது பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் என இரண்டு வகைப்படும்.
- **தண்டியலங்காரம்** எனும் அணி இலக்கண நூல் பெருங்காப்பியம், காப்பியம் ஆகிய இரண்டும் பொருள் தொடர் நிலைச் செய்யுளின் வகைகள் எனக் கூறுகின்றது.

**காப்பியத்தின் இலக்கணம்**

- பெருங்காப்பியம், சிறுகாப்பியம் ஆகிய இரண்டும் ஒரே வகை பாடலாகவும் பல வகையான பாடல்களாகவும் உரை கலந்தவையாகவும் பிற மொழி சொற்கள் கலந்துள்ளதாகவும் வரும்.

  **ஒருதிறப்பாட்டினும்பலதிறப்பாட்டினும்**
  **உரையும் பாடையும் விரவியும் வருமே** (தண்டியலங்காரம் நூற்பா - 8)

**காப்பியங்கள் தோற்றம்**

- தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை (சங்ககாலம்) அடுத்துத் தான் காப்பியக் காலம் தொடங்குகிறது.
- காப்பிய எழுச்சிக்கு வித்திட்டவர் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள். தமிழில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம்.
- இதனை அடியொற்றியே தமிழில் பல காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளன.
- சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் எழுந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தாலும் அவை அனைத்தும் ஊகங்களே.

- திருமணம் செல்வக்கேசவராய முதலியார் தாம் எழுதிய 'கம்பநாடர்' என்னும் நூலிலே தமிழில் தண்டியலங்காரம் தோன்றுவதற்கு முன்பே காவியங்கள் ஏற்பட்டுவிட்டன என்று குறிப்பிட்டுள்ளார்.
- அவர் கூற்று, "தமிழில் தண்டியலங்காரம் ஏற்படுவதற்கு முன்னரே ஐம்பெருங்காப்பியங்களில் சிந்தாமணியும் ஐஞ்சிறுகாப்பியங்களும் ஏற்பட்டு விட்டன. இவைகளெல்லாம் பெரும்பான்மை வடமொழி காப்பியங்களின் போக்கைப் பின்பற்றியவை. இவற்றைப் பாடிய கவிகள் வடமொழிப் புலமை நிரம்பிய சமணப் புலவர்கள்."

**தமிழ் மரபு காப்பியங்கள்**

- காப்பியம் என்றாலே தமிழர்களுக்குச் **சங்ககாலத்தை ஒட்டித் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களும் ஐஞ்சிறுகாப்பியங்களும்** தான் நினைவுக்கு வரும். (UGC NET 2014)
- தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான காப்பியங்கள் பிற்காலத்தில் தோன்றின.
- இருபதாம் நூற்றாண்டில் பாரதியாரின் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாரதிதாசனின் வீரத்தாய், புரட்சிக்கவி, பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், கவிமணியின் மருமக்கள் வழி மான்மியம், **முடியரசனின் பூங்கொடி**, வீரகாவியம், சுத்தானந்த பாரதியாரின் பாரத சக்தி மகா காவியம், புலவர் குழந்தையின் இராவண காவியம், வாணிதாசனின் கொடிமுல்லை, கண்ணதாசனின் ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, **பண்ணனின் செந்நீர் காவியம்** முதலானவை காப்பியங்களாகவே எண்ணப்படுகின்றன. (UGC NET - 2014)
- தமிழ்க் காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் ஆகியவை மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன.
- மற்ற காப்பியங்கள் சமசுகிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ உள்ளன.

**மாதிரி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. காப்பியம் ____________ நோக்கி வளர வேண்டும்.

அ) நன்மை ஆ) புதுமை

இ) வலிமை ஈ) பெருமை

2. காப்பியத்தின் இலக்கணம் கூறும் நூல் எது?

அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம்

இ) நன்னூல் ஈ) புறநானூறு

3. எந்தக் காலத்துக்கு அடுத்ததாக காப்பியக் காலம் தொடங்கியது?

TEACHER'S CARE ACADEMY

அ) கற்காலம் ஆ) உலோகக் காலம்

இ) சங்க காலம் ஈ) சங்க மருவிய காலம்

4. கூற்று: 1 திருமணம் செல்வக்கேசவராய முதலியார் எழுதிய நூல் கம்பநாடர்.

கூற்று: 2 தமிழில் தண்டியலங்காரம் தோன்றும் முன்பே ஐம்பெருங்காப்பியங்களில் சிந்தாமணியும் ஐஞ்சிறு காப்பியங்களும் தோன்றின என்பது அவர் கருத்து.

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி தவறு

இ) கூற்று 1, 2 இரண்டுமே தவறு ஈ) கூற்று 1, 2 இரண்டுமே சரி

5. பொருத்துக.

| ஆசிரியர்கள் | காப்பியங்கள் |
|---|---|
| 1. பாரதியார் | அ) பூங்கொடி |
| 2. பாரதிதாசன் | ஆ) கொடிமுல்லை |
| 3. முடியரசன் | இ) வீரத்தாய் |
| 4. வாணிதாசன் | ஈ) பாஞ்சாலி சபதம் |

அ) ஈ, ஆ, அ, இ ஆ) ஈ, இ, ஆ, அ

இ) ஈ, இ, அ, ஆ ஈ) ஈ, அ, இ, ஆ

6. கீழ்க்காணும் காப்பியங்களில் பிற்கால காப்பியத்தைத் தேர்ந்தெடுக்க.

அ) வில்லிபாரதம் ஆ) நீலகேசி

இ) வளையாபதி ஈ) பெருங்கதை

7. ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும் உரையும் பாடையும் விரவியும் வருமே என்று காப்பியம் குறித்து கூறும் நூல் எது?

அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம்

இ) நன்னூல் ஈ) புறநானூறு

8. பாரதிதாசன் இயற்றிய காப்பியங்களைத் தேர்க.

i) குயில்பாட்டு

ii) வீரத்தாய்,

iii) காவியப்பாவை

iv) புரட்சிக்கவி

அ) i, ii ஆ) ii, iv

இ) iii, iv ஈ) ii, iii

## 2.1. பெருங்காப்பியங்கள்

- பொருள்தொடர் நிலையாய் அமையும் செய்யுள்களைக் கொண்ட இலக்கிய நூல்கள் பெருங்காப்பியங்கள் எனப்படுகின்றன.
- இவை பாட்டுடைத் தலைவனின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் தொகுப்பாக இருக்கின்றன.
- பெரும்பாலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல் அடிகளைக் கொண்டிருக்கும்.

**தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பியத்தின் வரையறைகள்**

1. பெருங்காப்பியத்தின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று இடம்பெறுதல் வேண்டும்.
2. அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப்பொருட்கள் நான்கும் சுட்டப்பட வேண்டும்.
3. காப்பியத் தலைவன் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்க வேண்டும்.
4. மலை, கடல், நாடு, நகர், பருவகாலம், சூரியன், சந்திரன் ஆகியவை பற்றி வருணனை இருக்க வேண்டும்.
5. உலகியல் வாழ்வில் மணநிகழ்வு, முடிசூடுதல், பொழில், நீர்நிலை ஆடுதல், புதல்வர் சிறப்பை உரைத்தல், மகிழ்தல், ஊடல் நடைபெறுதல் இடம்பெற வேண்டும்.
6. ஒழுக்க நெறியில் மேவி அமைச்சர்களோடு ஆலோசனை, கல்வி, தூது, போரில் வெற்றி ஆகியவை இடம்பெற வேண்டும்.
7. சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலான உட்பிரிவுகள் அமைந்திருக்க வேண்டும்.
8. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எண் வகை மெய்ப்பாடுகளைச் சொல்ல வேண்டும்.

**பெருங்காப் பியநிலை பேசுங்காலை**
**வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று**
**ஏற்புடைத் தாகி முன்வரவு இயன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகிக்**
**தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்**
**மலைகடல் நாடு வளநகர் பருவம்**
**இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து**
**நன்மணம் புணர்த்தல் பொன்முடி கவித்தல்**
**பூம்பொழில் நுகர்தல் புன்விளை யாடல்**
**தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்**
**புலவியில் புலத்தல் கலவியில் களித்தல் என்று**
**இன்னன புனைந்த நன்னடைத் தாகி**
**மந்திரம் தூது செலவு இகல் வென்றி**
**சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்**
**பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி** (UGC NET - 2015)
**நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்**
**கற்றோர் புனையும் பெற்றியது என்ப** (தண்டியலங்காரம் நூற்பா - 8)

இந்த இயல்புகளில் சில குறைந்து காணப்பட்டாலும் அவை பெருங்காப்பியத்தின் தன்மையோடே விளங்கும்.

TEACHER'S CARE ACADEMY

**ஐம்பெருங்காப்பியங்கள்**

- ❖ சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.
- ❖ சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்க மருவிய காலத்தில் தோன்றின.
- ❖ சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய மூன்றும் சோழர் காலத்தில் தோன்றிய காப்பியங்கள்.
- ❖ ஐம்பெருங்காப்பியங்கள் என்ற சொல்லை முதன்முதலில் கூறியவர் மயிலைநாதர்.
- ❖ ஐம்பெருங்காப்பியங்களின் நூல் பெயர்களை முதன்முதலாகக் குறிப்பிட்டவர் கந்தப்பத் தேசிகர் திருத்தணிகை உலா.

**தமிழன்னைக்கு அணிகலன்கள்**

- ❖ தமிழன்னையின் அணிகளாக இலக்கியங்களை முதன்முதலில் குறிப்பிட்டவர் சுத்தானந்த பாரதியார். (UGC NET 2013)
- ❖ தமிழன்னையின் காதுகளில் குண்டலங்களாக குண்டலகேசியும் கைகளில் அணிந்த வளையல்களாக வளையாபதியும் திகழ்கின்றது.
- ❖ கருணை பொருந்திய அத்தமிழன்னையின் மார்பில் (சீவக)சிந்தாமணி எனும் ஆரம் ஒளிவீசுகின்றது.
- ❖ தமிழன்னையின் மெல்லிய இடையில் (மணி)மேகலையும் திருப்பாதங்களில் சிலம்புகளும் (சிலப்பதிகாரம்) அணிந்து ஒளிர்கின்றது.

**காதொளிரும் குண்டலமும் கைக்குவளை**
**யாபதியும் கருணைமார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில்**
**மேகலையும் சிலம்பார்இன்பப்**
**போதொளிர் பூந்தாளிணையும் பொன்முடிச்**
**சூளாமணியும் பொலியச்சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்**
**தாங்குதமிழ் நீடுவாழ்க! (UGC NET - 2010)**

- ❖ இச்செய்யுளை இயற்றியவர் யாரெனத் தெரியவில்லை.
- ❖ ஐம்பெருங்காப்பிய நூல்களை உரைத்த பின் ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றான சூளாமணியை பொன் மணிமகுடமாகவும் திருக்குறளைச் செங்கோலாகவும் இப்பாடல் உவமிக்கின்றது.

**மாதிரி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. பெருங்காப்பியங்களில் இடம் பெறும் வருணனைகளை நிரல்படுத்துக.

1) கடல், 2) பருவகாலம், 3) நாடு, 4) சூரியன்

அ) 1, 4, 3, 2 ஆ) 1,2,3,4

இ) 1, 2, 3, 4, ஈ) 1, 3, 2, 4

2. பெருங்காப்பியப் பண்புகள்

i) வருபொருள் உரைத்தல்

ii) களப்பணி மேற்கொள்தல்

iii) தன்னிகரில்லாத் தலைவன்

iv) தூது செல்தல்

அ) அனைத்தும் சரி ஆ) ii, iii, iv மட்டும்

இ) i, iii, iv மட்டும் ஈ) i, ii, iii மட்டும்

3. ஐம்பெருங்காப்பியங்கள் என்ற சொல்லை முதன்முதலில் கையாண்டவர் யார்?

அ) கந்தப்பத் தேசிகர் ஆ) சுத்தானந்த பாரதியார்

இ) மயிலைநாதர் ஈ) தண்டியாசிரியர்

4.கூற்று: 1 ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை முதன்முதலாகக் கூறியவர் கந்தப்பத் தேசிகர்

கூற்று: 2 இவர் தண்டியலங்காரம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி தவறு

இ) கூற்று 1, 2 இரண்டுமே தவறு ஈ) கூற்று 1, 2 இரண்டுமே சரி

5. பட்டியல் ஒன்றை இரண்டோடு பொருத்துக.

| பட்டியல் 1 | பட்டியல் - 2 |
|---|---|
| 1. குண்டலகேசி | அ) பொன்மகுடம் |
| 2. வளையாபதி | ஆ) காதுகள் |
| 3. சூளாமணி | இ) செங்கோல் |
| 4. திருக்குறள் | ஈ) கைகள் |

அ) ஈ, ஆ, அ, இ ஆ) ஆ, இ, ஈ, அ

இ) ஆ, ஈ, அ, இ ஈ) ஈ, அ, இ, ஆ

6. ஐம்பெருங்காபப்பியங்களை தமிழன்னையின் அணிகலன்களாக உரைத்தவர்

அ) கந்தப்பத் தேசிகர் ஆ) சுத்தானந்த பாரதியார்

இ) மயிலைநாதர் ஈ) தண்டியாசிரியர்

### 2.1.1. சிலப்பதிகாரம்

- ஆசிரியர் இளங்கோவடிகள்.
- காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
- தமிழின் முதல் காப்பியம் என்ற சிறப்புடைய நூல்.
- பாவகை நிலைமண்டில ஆசிரியப்பா.

TEACHER'S CARE ACADEMY

- பெண்கள் காலில் அணியும் சிலம்பின் காரணமாக தோன்றிய கதை என்பதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

**சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள்**

- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் (சிலப்பதிகாரப் பதிகம்), **(UGC NET - 2013)**
- பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள்,
- முத்தமிழ்க் காப்பியம்,
- முதன்மைக் காப்பியம்,
- பத்தினிக் காப்பியம்,
- நாடகக் காப்பியம்,
- வரலாற்றுக் காப்பியம்,
- மூவேந்தர் காப்பியம்,
- புதுமைக் காப்பியம்,
- புரட்சிக் காப்பியம்,
- ஒற்றுமைக் காப்பியம்,
- ஒருமைப்பாட்டுக் காப்பியம்,
- சிறப்பதிகாரம் (உ.வே. சாமிநாதர்),
- குடிமக்கள் காப்பியம் (தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்),
- தமிழின் தேசியக் காப்பியம்,
- பைந்தமிழ்க் காப்பியம்.

**சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள்**

1. அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்,
2. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்,
3. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.

**சிலப்பதிகாரத்தின் முதன்மைக் கதைமாந்தரகள்**

1) கோவலன், 2) கண்ணகி, 3) மாதவி

**சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் மூன்று நகரங்கள்**

1) புகார், 2) மதுரை, 3) வஞ்சி

- மூவேந்தர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கில் **மூவேந்தர்களின் தலைநகரங்களில் கதை நடைபெறுகின்றது. (UGC NET - 2012)**
- **திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார்** என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்கி பூம்புகார் நகரையும் வாழ்த்துகிறது. **(UGC NET - 2021)**

**“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்...**



TEACHER'S CARE ACADEMY

- இந்நூலுக்கு உரை எழுதியவர்கள் **அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார்,** ந. மு. வேங்கடசாமி நாட்டார் மற்றும் பலர். **(UGC NET - 2012, 2013)**

**சிலப்பதிகாரம்**

- சிலம்பு எனும் சொல்லில் உள்ள **ம்** என்ற மெல்லின எழுத்து **ப்** என்ற வல்லின எழுத்தானதால் இது **வலித்தல் விகாரம். (UGC NET - 2015)**

**இளங்கோவடிகள்**

- இளங்கோவடிகள் சேர அரச மரபைச் சேர்ந்தவர்.
- பெற்றோர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், நற்சோனை; தமையன் சேரன் செங்குட்டுவன். சமயம் சமணம்.
- சோதிடன் கூறியதைப் பொய்யாக்கும் பொருட்டு இளவரசு பதவியை விடுத்துத் துறவு வாழ்க்கை மேற்கொண்டார்.
- குணவாயிற் கோட்டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடிகள் என்று குறிப்பிடுகின்றார் அரும்பத உரைகாரர்.
- திருக்குணவாயில் என்பது ஓர் ஊர். குணக்கன் என்பது கிழக்குதிசையில் உள்ள வாயில். **கோட்டம் என்பது அருகன் கோவில்**" என்று விளக்குகின்றார் அடியார்க்கு நல்லார். **(UGC NET - 2014)**
- இவர் தன் அண்ணனோடு மலை வளம் காணச் சென்றபோது, கண்ணகியைப் பற்றிய செய்தியை
- சீத்தலைச் சாத்தனார் எனும் புலவர் மூலமாக அறிந்தார்.

**"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது;**
**அடிகள் நீரே அருளுக" (சிலப்பதிகாரம் - பதிகம்: 61-62)**

- என்ற சாத்தனார் கூற்றிற்கு இணங்க இளங்கோவடிகள் தம் காப்பியப் படைப்பை மூவேந்தர்க்கும் உரியதாகவே படைத்துள்ளார்.
- கண்ணகியின் கற்பொழுக்கமும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும் அரசியல் நடுநிலைமையும் அவரை மிகவும் கவர, மூவேந்தர்களுக்கும் உரிய தமிழின் உயர் காவியமாக சிலப்பதிகாரத்தைக் கவி புனைந்தார் அவர்.
- **"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணமே பிறந்ததில்லை" - பாரதியார் (UGC NET - 2016)**
- "முதன் முதலாகத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள்" **- மு. வரதராசனார்**
- தமிழறிஞர்களால் மிகுதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல் சிலப்பதிகாரம்.
- பாவின் வளர்ச்சிக்கு வித்திட்ட நூல் சிலப்பதிகாரம்.
- பொருட்செறிவு, தெளிவான இனிய எளிய நடையுடன், அணிகள் பல பொதிந்த தமிழின் வளமான நூல்.

TEACHER'S CARE ACADEMY

- “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்”, “சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்” என்று பாரதியார் சிலப்பதிகாரத்தைப் புகழ்ந்துள்ளார்.
- சிலப்பதிகாரத்தில் **வரிப்பாடல்கள், மாலை, குரவை** ஆகியவை இடம் பெறுகின்றன. **(UGC NET - 2019)**

**நூலமைப்பு**

- சிலப்பதிகாரம் 3 காண்டங்கள், 30 காதைகள், 5001 பாடல் அடிகள் உடையது.

**அ) புகார்க் காண்டம் - 10 காதைகள்**

1. மங்கல வாழ்த்துப் பாடல்,
2. மனையறம் படுத்த காதை,
3. அரங்கேற்று காதை,
4. அந்தி மாலைச் சிறப்பு செய் காதை,
5. **இந்திர விழவு ஊர் எடுத்த காதை**, UGC NET 2013
6. கடல் ஆடு காதை,
7. கானல் வரி,
8. வேனிற்காதை,
9. கனாத் திறம் உரைத்த காதை,
10. நாடு காண் காதை

**ஆ) மதுரைக் காண்டம் - 13 காதைகள்**

1. காடு காண் காதை,
2. வேட்டுவ வரி,
3. புறஞ்சேரி இறுத்த காதை,
4. ஊர் காண் காதை,
5. அடைக்கலக் காதை,
6. கொலைக்களக் காதை,
7. ஆய்ச்சியர் குரவை,
8. **துன்ப மாலை**,
9. **ஊர் சூழ் வரி**,
10. **வழக்குரை காதை**, (UGCNET2022
11. **வஞ்சின மாலை**,
12. அழற்படுகாதை,
13. கட்டுரை காதை

**இ) வஞ்சிக் காண்டம் - 7 காதைகள்**

1. குன்றக் குரவை,
2. காட்சிக் காதை,
3. கால்கோள் காதை,
4. நீர்ப்படைக் காதை,
5. நடுகற் காதை,
6. வாழ்த்துக் காதை,
7. வரம் தரு காதை

**சிலப்பதிகாரத்தில் அணி**

- மடக்கணியை விளக்கும் முதல் காப்பியம் சிலப்பதிகாரம். (UGC NET 2014)
- செய்யுளில் இடம்பெறும் சொற்களில் அடங்கியுள்ள எழுத்துக்கள் இடையிலே பிரிக்காமலும் பிரித்தும் படிக்கும்பொழுது வெவ்வேறு பொருள்களைத் தந்தால் அது மடக்கணி ஆகும்.
- இதன் இலக்கணத்தைத் தண்டியலங்காரத்தின் 92ம் பாடல் வகுக்கின்றது.

**எழுத்தின் கூட்டம் இடை பிறிது இன்றியும்**
**பெயர்த்தும் பொருள்தரின் மடக்கு எனும் பெயர்த்தே**

- இளங்கோவடிகள் இக்காப்பியத்தில் பாடல் அடிகளை இடைமடக்காக இயற்றியுள்ளார்.
- கானல்வரி என்பது நெய்தல் திணைக்கு உரிய இரங்கல் பாட்டு. இதனை யாழ் மீட்டிக்கொண்டு முதலில் கோவலனும் பின் மாதவியும் பாடுகின்றனர்.

- பவளத்தால் ஆன உலக்கையைக் கையாற் பற்றி, வெண்மை ஆகிய முத்துக்களைக் குற்றுபவளின் சிவந்த கண்கள் உண்மையில் குவளை மலர்கள் அல்ல கொடியவை கொடியவை எனக் கோவலன் பாடுகிறான்.

**பவள உலக்கை கையால் பற்றி,**
**தவள முத்தம் குறுவாள் செங் கண்,**
**தவள முத்தம் குறுவாள் செங் கண்**
**குவளை அல்ல! கொடிய, கொடிய!**

- பூக்கள் நிறைந்த சோலையில் மயில்கள் ஆடவும் குயில்கள் விரும்பி இசை பாடவும் விருப்பம் பொருந்திய மாலைகள் அருகில் அசையவும் நடந்தாய் எனவே காவேரி நீ வாழ்வாயாக, நீ அவ்வாறு நடந்த செயலெல்லாம் உன் கணவனது அச்சம் தரும் வேலின் தன்மையைக் கண்டே என்பதை நான் அறிந்தேன்; வாழ்வாயாக என்று மாதவி பாடுகிறாள்.

**பூவர் சோலை மயில் ஆல,**
**புரிந்து குயில்கள் இசை பாட,**
**காமர் மாலை அருகு அசைய,**
**நடந்தாய்; வாழி, காவேரி!**
**காமர் மாலை அருகு அசைய**
**நடந்த எல்லாம் நின் கணவன்**
**நாம வேலின் திறம் கண்டே;**
**அறிந்தேன், வாழி, காவேரி!**

### சிறப்பு செய்திகள்

- பெண்துறவி கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் மதுரையில் மாதரியிடம் அடைக்கலப்படுத்தினார். மாதரியின் மகள் ஐயை. (UGC NET - 2012)
- **கடக்களிறு அடக்கிய கருணை மறவன்**, செல்லாச் செல்வன், இல்லோர்ச் செம்மல், **மண்தேய்த்த புகழினான்** எனப் போற்றப்படுபவன் கோவலன். (UGC NET - 2013)
- சிறுமுது குறைவி, கற்பின் கொழுந்து, பொற்பின் செல்வி, நீணில விளக்கு எனப் போற்றப்படுபவள் கண்ணகி.
- கண்ணகி முன் தோன்றிய தெய்வம் மதுராபதி.
- முற்பிறப்பில் கண்ணகியின் பெயர் நீலி, கோவலனின் பெயர் பரதன்.
- மாதவியின் முதல் கடிதத்தைக் கோவலனிடம் எடுத்து சென்றவள் வசந்தமாலை. மாதவியின் இரண்டாம் கடிதத்தைக் கோவலனிடம் எடுத்து சென்றவன் கௌசிகன்.
- கோவலன் மதுரை செல்வதைத் தடுக்க வசந்தமாலையின் உருவில் கானுறை தெய்வம் தோன்றியது.

TEACHER'S CARE ACADEMY

❖ **நளன் சரிதம் பற்றிய குறிப்பு** காணப்படும் காப்பியம் சிலப்பதிகாரம். **(UGC NET - 2018)**

❖ காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த **சாயலன் எனும் வாணிகன் எட்டிப்பட்டம் பெற்றிருந்ததைச் சிலப்பதிகாரம்** கூறுகிறது. (UGC NET - 2008, 2019)

❖ சிலப்பதிகாரம் **இந்திரவிழா 28 நாட்கள்** நடைபெற்றதைக் குறிப்பிடுகின்றது. **(UGC NET - 2008, 2023)**

❖காவிரி, வைகை முதலான ஆறுகளும் புகார், உறந்தை, மதுரை, வஞ்சி முதலான நகரங்களும் திருமால், பாசண்ட சாத்தன் முதலிய தெய்வங்களும் அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும் இந்நூலில் நன்கு வருணிக்கப்பட்டுள்ளன.

❖ **சிலம்பு** கூறும் இசை நரம்புகள் வரிசை **இணை, கிளை, நட்பு, பகை (UGC NET - 2016)**

❖ இறையனார் களவியல் உரைகாரர், இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்கள் இந்நூல் கருத்துகளை மேற்கோளாகக் காட்டுகின்றனர்.

**முதன்மை கதை மாந்தர்கள்**

**1) கண்ணகி**

❖ பாட்டுடைத் தலைவி, மாநாய்கன் எனும் வணிகன் மகள், கோவலன் மனைவி. களங்கமற்ற பெண்ணொழுக்கத்தின் எடுத்துக்காட்டாக, கற்புநெறியின் அளவுகோலாக படைக்கப்பட்டவள். கணவன் போற்றா ஒழுக்கம் புரிந்தபோதும் அதை மாற்றா உள்ள வாழ்க்கையே ஆனவள். எவ்வித ஆராய்வுமின்றிப் பொய்க் குற்றச்சாட்டின் மீது கொலைத் தண்டனைக்கு உட்பட்ட தனது கணவனின் குற்றமற்ற தன்மையைப் பாண்டிய அரசன் நெடுஞ்செழியனிடம் வாதித்து நிரூபித்தாள். சினம் தணியாத கண்ணகி மதுரை நகரையும் தன் கற்பின் வலிமையால் எரித்தாள். நற்றிணையில் கண்ணகியின் வரலாறு ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

**2) கோவலன்**

❖ வணிகர் குடியில் தோன்றிய பெரும்செல்வந்தர் மாசாத்துவானின் மகன். அவன் அறிவு, உரு, குலம், உயர்பேர் ஒழுக்கமம், கடவுள் வழிபாட்டுச் சிந்தனை உடையவன். பிற ஒழுக்கங்கள் அனைத்தும் நிறைந்திருந்தாலும் மோகத்தால் அழிந்தவன். ஊழ்வினை காரணமாக உயிரிழந்தவன்.

**3) மாதவி**

❖ ஆடற்கலையின் ஆழம் உணர்ந்த பேரழகி. அரசனிடம் பச்சை மாலையும் தலைக்கோலி பட்டமும் பெற்றவள் மாதவி. கணிகையர் குலத்தோன்றல் எனினும் கற்புநெறி வழுவாமல் கோவலனுக்கென்றே வாழ்ந்தவள். கோவலன் மற்றும் கண்ணகியின் மறைவிற்குப் பின் பொதுவாழ்விலிருந்தும் கலைப்பணியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டாள். உலக சுகங்களின்றி வளர்ப்பதற்காக தன் மகள் மணிமேகலையோடு தானும் புத்த சமய மடம் ஒன்றில் சமயத் துறவி ஆனாள்.



TEACHER'S CARE ACADEMY

# COLLEGE TRB

# தமிழ்

2024-2025



TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

*Your Success is Our Goal...*

## UNIT-3

## பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், உரையாசிரியர்கள்

tcaexamguide@gmail.com
Teachers Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide

9360268118
7639967359
6369036346
9566535080

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

### அலகு 3 (பகுதி -1 & 2)

### பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், உரையாசிரியர்கள்



**COMPETITIVE EXAM**

**FOR**

**ASSISTANT PROFESSOR TRB 2024 - 25**

# UNIT 3

# பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், உரையாசிரியர்கள்


| S.NO | INDEX | PAGE NO |
|---|---|---|
| 3.1 | பக்தி இலக்கியங்கள் | 1 |
| 3.1.1 | பன்னிரு திருமுறைகள் | 5 |
| 3.2 | நாலாயிரத் திவ்விய பிரபந்தம் | 58 |
| 3.3.1 | சித்தர் பாடல்கள் | 78 |
| 3.3.2 | அருணகிரிநாதர் | 98 |
| 3.3.3 | தாயுமானவர் | 103 |
| 3.3.4 | வள்ளலார் | 106 |
| 3.3.5 | குணங்குடி மஸ்தான் சாகிபு | 115 |
| 3.4 | சிற்றிலக்கிய வகைகள் | 118 |
| 3.5 | தனிப்பாடல் திரட்டு | 144 |
| 3.6 | உரையின் தோற்றமும் வளர்ச்சியும் | 153 |
| 3.7 | அடியார்க்கு நல்லார் | 165 |
| 3.7.2 | நச்சினார்க்கினியர் | 188 |
| 3.7.3 | திருக்குறள் பழைய உரையாசிரியர்கள் | 206 |
| 3.7.4 | காலிங்கர் | 223 |
| 3.7.5 | மணக்குடவர் | 231 |
| 3.7.6 | பரிப்பெருமாள் | 235 |

| | | |
|---|---|---|
| 3.7.7 | பரிமேலழகர் | 240 |
| 3.8 | நாதமுனி | 265 |
| 3.9 | சிவஞான முனிவர் | 270 |
| 3.10 | 'பண்டிதமணி' மு. கதிரேசனார் (1881 - 1953) | 281 |
| 3.11 | ஔவை சு. துரைசாமி | 287 |
| 3.12 | பொ. வே. சோமசுந்தரனார் | 293 |
| 3.13 | பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 295 |
| 3.14 | வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் | 298 |
| 3.15 | உ. வே. சாமிநாதையர் | 300 |
| 3.16 | சி.வை. தாமோதரம்பிள்ளை | 325 |
| 3.17 | புலவர் குழந்தை | 334 |
| 3.18 | 'சிவக்கவிமணி' சி.கே. சுப்பிரமணியனார் | 337 |
| 3.19 | கா. மு. ஷெரீப் | 340 |
| 3.20 | பயிற்சி வினாக்கள் | 347 |
| 3.21 | கட்டுரை வினாக்கள் | 367 |



TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
**HEAD OFFICE**: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL,
SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018.
B.Off 3:266-C, Advaitha Ashram Road,(Opp to New Bus Stand), Salem-636 004.
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# ASSISTANT PROFESSOR TRB

# TAMIL – 2024-25

# அலகு – 3 (பகுதி -1) – பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், உரையாசிரியர்கள்

## 3.1. பக்தி இலக்கியங்கள்

- கடவுளை வணங்குதல், கடவுளிடம் தன்னை அர்ப்பணித்தல் எனும் பொருளில் இன்று **பக்தி** எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது.
- கடவுளின் மீது மனிதன் கொண்ட நம்பிக்கையைப் பக்தி என்பர். பக்தியால் அன்பு பெருகி உயிர் தூயநிலையை அடைகிறது.
- கடவுளின் மீது மனிதன் கொண்டுள்ள எல்லை கடந்த **அன்பே பக்தி** என்ற பொருளில் தமிழ் இலக்கியங்களில் மிகுதியும் கையாளப்படுகின்றது.

**பக்தி இலக்கியங்களின் தோற்றம்**

- பக்தி இலக்கியங்கள் தமிழில் தோன்றிய அளவுக்கு வேறு எந்த மொழியிலும் தோன்றவில்லை. இவை பெரும்பாலும் பல்லவர் காலத்திலேயே தோன்றின.
- சங்க இலக்கியங்களில் மனிதர்களின் காதல் வாழ்வு கற்பனை கலந்த பாடல்களாகப் பாடப்பட்டது.
- பின் இந்நிலை மாறித் தெய்வத்தின்மீது கொண்ட காதலைப் பாடும் பாடல்களாக வளர்ச்சி பெற்றன.
- அரசர்களின் வீரம் மற்றும் கொடை பற்றிப் பாடிய பாடல்கள் கடவுளின் திருவிளையாடல்களையும் அருள் செயல்களையும் பாடும் பாடல்களாக மாறின.
- கற்பனைக் காதலுக்குப் பின்னணியாக இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டது போலவே கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாகக் கோவில் தலங்களைச் சூழ்ந்த ஊர்களின் இயற்கைய அழகைப் பாடும் நிலை உருவானது.

TEACHER'S CARE ACADEMY

- பக்தி இலக்கியங்களில் பக்தி அனுபவங்களைத் தனித்தனிப் பதிகங்களில் (பத்துப் பாடல்களைக் கொண்டிருப்பது பதிகம்) வெளிப்படுத்துதல், பிரபந்தங்களில் (பொதுவாக இசையோடு கூடிய பாடல் என்பது பொருள்) வெளிப்படுத்துதல் என இரு வகைகள் உள்ளன.
- பக்தி இலக்கிய காலத்தில் இயற்றமிழ்ப் பாடல்கள் பண்ணோடு இயைந்து இசைத்தமிழ்ப் பாடல்களாக மாறின.
- கற்றோர் நாவில் மட்டும் நடனமாடிய தமிழ் கல்லாதார் நெஞ்சிலும் களிநடனம் புரிந்தது. வடமொழிச் சொற்களும் தமிழுடன் இணைந்து சொல்வளமும் உணர்ச்சிப் பெருக்கும் இசை இனிமையும் சேர்ந்து புதிய மரபு தோன்றியது.
- இந்த எழுச்சிக்கு ஆதரவளித்த பல்லவர் ஆட்சிக் காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம் எனப்படுகிறது. பக்தி இயக்கத்தால் தமிழகத்தில் தமிழுக்கு மீண்டும் புதுப்பொலிவு ஏற்பட்டது.

**தமிழகத்தில் பக்தி நெறி**

- சங்ககாலத்திலும் அதற்குப் பின்னரும் இயற்கையை முன்நிறுத்திய வழிபாட்டு முறைகளும் (பராய்க்கடன், வெறியாட்டு போன்ற சடங்குகள்) நம்பிக்கைகளும் இருந்தன. அக்கால கட்டத்தில் வைதிக நெறியும் இதனை மறுத்த சமண பௌத்த நெறிகளும் தமிழகத்தில் பரவின.
- சமண, பௌத்த சமயங்கள், "உயிர், உடம்பு, பொருள், இளமை ஆகியன நிலையாக நில்லாமல் மறைந்துவிடக் கூடியவை. இவற்றை உணர்ந்து அறத்தைச் செய்பவனாக மனிதன் மாற வேண்டும்" என்று வலியுறுத்தின. சமயப் பெரியோர் அருள் உணர்வு உடையோராகவும் பண்பாடு மிக்கவராகவும் இருந்தனர்.
- மேலும், "பிறவாநிலையை அடைவதற்குத் துறவறமே சிறந்த வழி" என்ற அறவியல் கருத்து நிலவியது. உலகில் உள்ள நிலையில்லாத இன்பங்களை ஒதுக்கி, நிலையான வீடுபேற்றை நாடுவதே கடமை என்று கருதும் நிலை உருவானது.
- இச்சூழலில், நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி "உலக இன்பங்களைத் துய்த்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம். இறைவன் அன்பின் வடிவானவன், அன்பு ஒன்றே அவனை அடையும் வழி" என இல்லறத்திற்கும் முதன்மை கொடுத்தனர்.
- ஊர்கள்தோறும் கோவில்களுக்குச் சென்று இசைப்பாடல்களால் மனமுருக இறைவனைப் பாடிப் பரவினர். அப்பாடல்கள், கற்றவர்களோடு மற்றவர்களும் கூடிப் பாடுமாறு எளிய இனிய தமிழில் இருந்தன.
- இறைவனை ஆண்டான், தந்தை, தோழன், நாயகன் எனப் பல பரிமாணங்களில் கண்டு போற்றினர். இவற்றையே தாச, சற்புத்திர, சக, ஞான மார்க்கங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

- திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் போன்றோர் அடிமை நெறியையும் திருஞானசம்பந்தர் பிள்ளைமை நெறியையும் சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும் மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர்.
- பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாகக் கருதித் தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். அவரது வளர்ப்பு மகள் ஆண்டாள் இறைவனையே தன் தலைவனாகப் பாவித்து வாழ்ந்தாள்.
- சிவனைத் தலைவனாகக் கொண்ட 27 அடியார்கள் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகள் என்றும் திருமாலைத் தலைவனாகக் கொண்ட 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்றும் அழைக்கப்பட்டன.
- முகலாயப் படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் இசுலாம் பரவியது. இசுலாமியக் கவிஞர்கள் தமிழ் மரபைப் பின்பற்றி இறைவனையும் இறைத்தூதரான நபிகள் நாயத்தையும் போற்றினர். இசுலாமியப் பாடல்கள் மொழிபெயர்ப்புப் பாடல்களாகவும் நேரடிப் பாடல்களாகவும் இரு வகைகளில் பாடப்பெற்றன.
- பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டிலிருந்து கிறித்துவ மதபோதகர்கள் பெருமளவில் தமிழகத்திற்கு வந்தனர். அவர்கள் பன்மொழிப் புலமையும் பல்துறை அறிவும் மிக்க தமிழ் மக்களிடம் இரண்டறக் கலந்து தமிழைக் கற்றனர். தமிழ் மொழியின் வழி தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இதன் விளைவாக கிறித்துவ இலக்கியங்களும் தமிழில் பல்கிப் பெருகின.
- தமிழைப் பக்திமொழி என்றும் ஜெர்மனி மொழியைத் தூதின் மொழி என்றும் இத்தாலி மொழியைக் காதலின் மொழி என்றும் ஆங்கில மொழியை வணிகத்தின் மொழி என்றும் மறைத்திரு தனிநாயகம்அடிகள் கூறியுள்ளார்.

**பல்லவர் காலத்தில் சமயநிலை**

- பல்லவர் ஆட்சி காலத்தைப் பக்தி இயக்கக் காலம் அல்லது சைவ வைணவ காலம் என வழங்குவர். இக்காலத்தில் பிரபந்தங்கள் தோன்றி வளர்ந்தன.
- முதன்முதலில் தமிழ்நாட்டில் விநாயகர் வழிபாட்டைப் பல்லவர்களே கொண்டுவந்தனர்.
- தொண்டை நாட்டையும் சேர நாட்டையும் களப்பிரரிடமிருந்து சிம்மவிஷ்ணு பல்லவன்(பிற்காலப் பல்லவ அரசன்) கைப்பற்றினான்.
- பாண்டியன் கடுங்கோன் களப்பிரரிடமிருந்து தன் நாட்டை விடுவித்தான். வடக்கே பல்லவர்களும் தெற்கே பாண்டியர்களும் தமிழகத்தை ஆண்டனர்.
- இக்காலத்தில் சமண பௌத்த சமயங்கள் வலுவிழந்து சைவ, வைணவ சமயங்கள் மேலோங்கின. மன்னவன் வழியே மக்களும் ஒழுகினர்.

TEACHER'S CARE ACADEMY

- வடக்கே திருநாவுக்கரசர் மகேந்திரவர்ம பல்லவனையும் தெற்கே திருஞானசம்பந்தர் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனையும் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினர்.
- இது தேவார, திவ்வியப் பிரபந்தங்கள் பிறந்த காலம். பிற இலக்கியங்களில் இல்லாத அளவில் மூவர் தேவாரமும் முதலாழ்வார் நீங்கிய ஒன்பதின்மரின் பிரபந்தங்களும் தோன்றின.
- கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சைவம் சிறக்க வைணவம் தாழ்ந்திருந்தது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வைணவம் வளமுற சைவம் சிறிதடங்கியது.

**மாதிரி வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. கடவுள் மீது மனிதன் கொண்ட ____________________ பக்தி ஆகும்.

A) உண்மை அன்பு B) நம்பிக்கை

C) அளவுகடந்த நேசம் D) நட்பு

2. பக்தி இலக்கியங்களின் கருப்பொருட்களைத் தேர்ந்தெடுக்க.

1) இறைவன் திருவிளையாடல்கள், 2) அர்ப்பணிக்கும் சடங்குகள்,

3) இயற்கைச் சூழல், 4) அருள்செயல்கள்

A) அனைத்தும் B) 1, 4

C) 2, 3 D) 2, 4

3. கூற்று: 1 பக்தி இலக்கியங்கள் பதிகங்களாகவும் பிரபந்தங்களாகவும் தோன்றின.

கூற்று: 2 பக்தி இலக்கியங்கள் பல்லவர் காலத்தில் வளர்ச்சி அடைந்தன.

A) கூற்று 1 சரி கூற்று 2 தவறு B) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

C) கூற்று 1, 2 இரண்டுமே தவறு D) கூற்று 1, 2 இரண்டுமே சரி

4. கீழ்க்காணும் மார்க்கங்களை நிரல்படுத்துக.

1) சகம், 2) தாசம், 3) ஞானம், 4) சற்புத்திரம்

A) 2, 1, 3, 4 B) 4, 1, 3, 2

C) 4, 3, 1, 2 D) 2, 4, 1, 3

5. இயற்கையை முன்னிறுத்திய வழிபாட்டு முறை காணப்படும் இலக்கியம் எது?

A) சங்க இலக்கியம் B) நீதி இலக்கியம்

C) பக்தி இலக்கியம் D) காப்பியம்

TEACHER'S CARE ACADEMY

6. பொருத்துக.

| மொழி | கருப்பொருள் |
|---|---|
| a. தமிழ் | 1) காதல் |
| b. ஜெர்மன் | 2) வணிகம் |
| c. இத்தாலி | 3) தூது |
| d. ஆங்கிலம் | 4) பக்தி |

A) 3, 1, 4, 2　　B) 4, 3, 1, 2

C) 2, 3, 1, 4　　D 4, 3, 2, 1

7. சைவ சமயம்

1) சிவபெருமானைத் தலைவனாகக் கொண்ட சமயம்.

2) சைவத் திருமுறைகளைப் பாடியவர்களின் எண்ணிக்கை 27.

3) திருநாவுக்கரசர் நின்றசீர் நெடுமாறனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாற்றினார்.

4) சைவ அடியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர்.

A) 1, 2　　B) 3, 4　　C) 1, 3　　D) 2, 4

8. தமிழகத்தில் விநாயகர் வழிபாட்டைக் கொண்டு வந்தவர்கள் யார்?

A) சேரர்கள்　　B) சோழர்கள்

C) பாண்டியர்கள்　　D) பல்லவர்கள்

## 3.1.1. பன்னிரு திருமுறைகள்

- சிவபெருமானைத் தலைவனாகக் கொண்டு வழிபடுபவர்கள் சைவ சமயத்தவர் ஆவர்.
- சிவனைப் பற்றிச் சைவப் பெரியோர்கள் பாடிய பாக்கள் திருமுறைகள் எனப்படும்.
- பன்னிரண்டு திருமுறைகள்இருப்பதால் பன்னிரு திருமுறைகள் என்று வழங்குவர்.
- பன்னிரு திருமுறைகளைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 27. இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 18,326.
- திருமுறைகளில் பாடப்பட்ட சைவத் திருத்தலங்கள் 252.

### தொகுப்புமுறை

- திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. தொகுப்பித்தவர் முதலாம் இராசராச சோழன்.
- இராசராசசோழனின் வேண்டுகோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பி தொகுத்ததால் அவருக்குத் திருமுறை கொண்ட சோழன் எனப் பெயர் உண்டு.

TEACHER'S CARE ACADEMY

- திருமுறைகளைத் தொகுப்பித்தவர் முதலாம் ஆதித்தன் எனச் சதாசிவப் பண்டாரத்தார், ஔவை.துரைசாமி பிள்ளை ஆகியோரும் இரண்டாம் ஆதித்தன் என்று சோமசுந்தர தேசிகரும் கருதுகின்றனர்.
- நம்பியாண்டார் நம்பி தொகுத்தது 11 திருமுறைகள் மட்டுமே.
- சேக்கிழார் பாடிய பெரியபுராணம் நம்பியாண்டார் நம்பியின் காலத்திற்குப் பின் தொகுக்கப்பட்டது.

| திருமுறைகள் | நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| முதல், இரண்டாம், மூன்றாம் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசர் |
| ஏழாம் திருமுறை | தேவாரம் | சுந்தரர் |
| எட்டாம் திருமுறை | திருவாசகம், திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா | திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி காடவ நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் |
| | திருப்பல்லாண்டு | சேந்தனார் |
| பத்தாம் திருமுறை | திருமந்திரம் | திருமூலர் |
| **பதினோராம் திருமுறை** | **பிரபந்த மாலை - 40 நூல்களின் தொகுப்பு** (UGC NET 2012, 2013) | திரு ஆலவாய் உடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமான் நாயனார், நக்கீரதேவ நாயனார், கல்லாடதேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டணத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி |
| பன்னிரண்டாம் திருமுறை | பெரியபுராணம் | சேக்கிழார் |

TEACHER'S CARE ACADEMY

**தேவாரம்**

- தே + வாரம் = தேவாரம். தெய்வங்கள் மீது பாடப்பட்ட ஆரம் (பாமாலை) என்பதால் தேவாரம் எனப் பெயர் பெற்றது.
- முதல் திருமுறை தொடங்கி ஏழாம் திருமுறை வரை உள்ள ஏழு திருமுறைகள் 'தேவாரம்' என்று அழைக்கப்படுகிறது.
- முதல் மூன்று திருமுறைகளை இயற்றியவர் திருஞானசம்பந்தர் எனவே இவை சம்பந்தர் தேவாரம் என்று அழைக்கப்படுகின்றன.
- நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளை இயற்றியவர் திருநாவுக்கரசர் எனவே இவை திருநாவுக்கரசர் தேவாரம் என்று அழைக்கப்படுகின்றன.
- ஏழாம் திருமுறையை இயற்றியவர் சுந்தரர் என்பதால் இது சுந்தரர் தேவாரம் என்று அழைக்கப்படுகின்றது.
- தேவாரத்திற்கு மூவர் தமிழ் என்ற பெயரும் உண்டு.
- தேவாரம் பத்துப் பாடல்களைக் கொண்ட பதிகத்தின் வடிவில் பாடப்பட்டுள்ளன. இதில் மட்டும் 8227 பாடல்கள் உள்ளன.

**தேவார மூவர்**

- தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் தேவார மூவர் என்று அழைக்கப்படுகின்றனர்.
- இவர்களை முதல் மூவர், மூவர் முதலிகள்,தமிழ் மூவர் என்றும் வழங்குவர்.
- மூவர் பாடலையும் பட்டினத்தடிகள் வித்தகப் பாடல் என்று கூறுகிறார்.
- தாயுமானவர் மூவர் பாடலையும் மூவர் சொல்லும் தமிழ் என்றுகூறுகிறார்
- இரட்டையர் பாடிய ஏகாம்பரநாதர் உலாவில் முதன்முதலாக மூவர் பாடிய பாடல்களைத் தவிர தேவாரம் என்ற சொல் இடம்பெறுகின்றது.

**அன்பின் மூவர்முதலிலும் தேவாரம் செய்ததிருப் பாட்டும்**

- இராமலிங்கர் பணிமன்றம், நாரத கான சபா ஆகிய இரண்டும் இணைந்து வருடந்தோறும் சென்னையில் தேவார மூவர் இசைக் கலைவிழா நடத்துகின்றன.
- இவர்களைப் பற்றிப் புலவர் வீ. சிவஞானம் தேவார மூவர் வாழ்வும் வாக்கும் எனும் நூலை இயற்றியுள்ளார்.
- தேவார மூவரோடு மாணிக்கவாசகரையும் சேர்த்து சைவ சமயக் குரவர்கள் நால்வர் என்று வழங்குவர்.

**முதல் மூன்று திருமுறைகள்**

- ஆசிரியர் திருஞானசம்பந்தர். இதனைத் திருகடைகாப்பு, சம்பந்தர் தேவாரம் என்பர்.
- சீர்காழிப் பொய்கைக்கரையில் உமையன்னையிடம் உண்ட ஞானப்பால் வாயில் ஒழுக நின்றிருந்தார் சம்பந்தர். இதைக் கண்ட அவரது தந்தை கையில் சிறுகோல் கொண்டு



TEACHER'S CARE ACADEMY

"எச்சில்படும்படி இப்பாலூட்டினாரைக் காட்டுக" என மிரட்டிக் கேட்க இவர் கண்களில் நீர்மல்கத் தம்மை ஆட்கொண்ட திருத்தோணியப்பரைத் தம் வலது கைவிரலால் சுட்டிக்காட்டிப் பாடிய முதல் பாடல் **தோடுடைய செவியன். UGC NET 2015**

**அ) முதல் திருமுறை**

இதில் 136 பதிகங்களும் அவற்றுள் 1469 பாடல்களும் உள்ளன. இத்தேவாரப் பாக்கள் அச்சிறுபாக்கம்(1), அண்ணாமலை (2), அதிகை வீரட்டானம் (1), அம்பர் மாகாளம் (1), அன்பிலாலந்துறை (1), அன்னியூர் (1), ஆப்பனூர் (1), ஆரூர் (2), ஆலங்காடு (1), ஆலவாய் (1), ஆவூர்ப் பசுபதீச்சரம் (1), இடும்பாவனம் (1), இடைச்சுரம் (1), இடைமருதூர் (5), இராமனதீச்சரம் (1), இலம்பையங்கோட்டூர் (1), ஈங்கோய்மலை (1), ஊறல் (1), எருக்கத்தம்புலியூர் (1), ஐயாறு (3), ஓத்தூர் (1), கச்சிஏகம்பம் (1), கடைமுடி (1), கண்ணார்கோயில் (1), கயிலாயம் (1), கரவீரம் (1), கழுக்குன்றம் (1), கள்ளில் (1), கற்குடி (1), காட்டுப்பள்ளி (1), காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் (1), காழி (திருப்பிரமபுரம்) (3){வேணுபுரம்1, புகலி 3, வெங்குரு 1, தோணிபுரம் 1, சிரபுரம் 2, புறவம் 2, சண்பை 1, சீகாழி 4, கழுமலம் 4}, கானூர் (1), குடந்தைக்காரோணம் (1), குரங்கணில்முட்டம் (1), குற்றாலம் (1), கொடிமாடச்செங்குன்றூர் (1), கொடுங்குன்றம் (1), சிதம்பரம் (1), கோலக்கா (1), கோளிலி (1), சிராப்பள்ளி (1), சிவபுரம் (4), செங்காட்டங்குடி (1), செம்பொன்பள்ளி (1), சேய்ஞ்ஞலூர் (1), சோபுரம் (1), சோற்றுத்துறை (1), தருமபுரம் (1), தூங்கானைமாடம் (1), நல்லம் (1), நல்லூர் (1), நள்ளாறு (2), நறையூர்ச்சித்தீச்சரம் (2), நாகைக்காரோணம் (1), நின்றியூர் (1), நெடுங்களம் (1), நெய்த்தானம் (1), பரங்குன்றம் (1), பராய்த்துறை (1), பருப்பதம் (1), பழனம் (1), பறியலூர் (1), பனையூர் (1), பாச்சிலாச்சிராமம் (1), பாதாளீச்சரம் (1), பாம்புரம் (1), பாற்றுறை (1), புகலூர் (1), புத்தூர் (1), புள்ளமங்கை (1), புன்கூர் (1), பூவணம் (1), பேணு பெருந்துறை (1), மயிலாடுதுறை (1), மருகல் (1), மறைக்காடு (2), மாற்பேறு (2), முதுகுன்றம் (4), வடுகூர் (1), வல்லம் (1), வலிதாயம் (1), வலிவலம் (2), வாழ்கொளிபுத்தூர் (1), வியலூர் (1), வீழிமிழலை (7), வேட்களம் (1), வேற்காடு (1) ஆகிய 88 தலங்கள் பற்றிப் பாடுகின்றன.

**செம்பொனின் மேனியனாம் பிரமன்றிரு மாலுந்தேட நின்ற**
**அம்பவ ளத்திரள்போ லொளியாய வாதிபிரான்**
**கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய**
**நம்பன தாடொழுவார் வினையாய நாசமே**

**ஆ) இரண்டாம் திருமுறை**

இதில் 122 பதிகங்களும் அவற்றுள் 1331 பாடல்களும் உள்ளன. திருப்பூந்தராய் (1), திருவலஞ்சுழி (2), திருத்தெளிச்சேரி (1), திருவான்மியூர் (1), திருவனேகதங்காபதம் (1), திருவையாறு (2), திருவாஞ்சியம் (1), திருச்சிக்கல் (1), திருமழபாடி (1), திருமங்கலக்குடி (1), சீகாழி (7), திருவேகம்பம் (1), திருக்கோழம்பம் (1), திருவெண்ணியூர் (1), திருக்காறாயில்

TEACHER'S CARE ACADEMY

(1), திருமணஞ்சேரி (1), திருவேணுபுரம் (2), திருமருகல் (1), திருநெல்லிக்கா (1), திருஅழுந்தூர் (1), திருக்கழிப்பாலை (1), திருக்குடவாயில் (1), திருவானைக்கா (1), திருநாகேச்சரம் (2), திருப்புகலி (4), திருநெல்வாயில் (2), திருஇந்திரநீலப்பருப்பதம் (1), திருக்கருவூரானிலை (1), திருப்பழுவூர் (1), திருப்புறம்பயம் (1), திருக்கருப்பறியலூர் (1), திருநள்ளாறு (1), திருக்குரங்காடுதுறை (1), திருஇரும்பூளை (1), திருமறைக்காடு (2), திருச்சாய்க்காடு (2), திருத்தோத்திரக்கோவை, திருப்பிரமபுரம் (5), திருஆக்கூர் (1), திருப்புள்ளிருக்குவேளூர் (1), திருஆமாத்தூர் (2), திருக்கைச்சினம் (1), திருநாலூர்த்திருமயானம் (1), திருமயிலாப்பூர் (1), திருவெண்காடு (2), திருக்களர் (1), திருக்கோட்டாறு (1), திருப்புறவார் (1), திருத்தலைச்சங்காடு (1), திருவிடைமருதூர் (1), திருநல்லூர் (1), திருக்குடவாய் (1), திருப்பாசூர் (1), திருமீயச்சூர் (1), திருஅரிசிற்கரைப்புத்தூர் (1), திருமுதுகுன்றம் (1), திருஆலவாய் (1), திருப்பெரும்புலியூர் (1), திருக்கடம்பூர் (1), திருப்பாண்டிக்கொடுமுடி (1), திருக்குறும்பலா (1), திருநணா (1), திருஅகத்தியான்பள்ளி (1), திருஅறையணிநல்லூர் (1), திருவிளநகர் (1), திருவாரூர் (2), திருக்கடவூர்மயானம் (1), திருத்தேவூர் (1), திருக்கொச்சைவயம் (2), திருநனிபள்ளி (10), கோளாறு திருப்பதிகம், திருநாரையூர் (1), திருநறையூர் (1), திருமுல்லைவாயில் (1), திருப்புகலூர் (2), திருத்தெங்கூர் (1), திருவாழ்கொளிபுத்தூர் (1), திருஅரைசிலி (1), திருத்துருத்தி (1), திருக்கோடிகா (1), திருக்கோவலூர் வீரட்டம் (1), திருச்சிரபுரம் (1), திருஅம்பர்த்திருமாகாளம் (1), திருக்கடிக்குளம் (1), திருக்கீழ்வேளூர் (1), திருக்கேதீச்சரம் (1), திருவிற்குடிவீரட்டானம் (1), திருக்கோட்டூர் (1), திருமாந்துறை (1), திருவாய்மூர் (1), திருஆடானை (1), திருக்கேதாரம் (1), திருநாகைக்காரோணம் (1), திருஇரும்பைமாகாளம் (1), திருத்திலதைப்பதி (1), திருமூக்கீச்சரம் (1), திருப்பாதிரிப்புலியூர் (1) ஆகிய 97 தலங்கள் பற்றிப் பாடப்பட்டுள்ளன.

**“வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனி பாம்பி ரண்டு முடனே** **UGC NET 2015**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியார வர்க்கு மிகவே”** (கோளறு பதிகம்)

**இ) மூன்றாம் திருமுறை**

இதில் 125 பதிகங்களும் அவற்றுள் 1347 பாடல்களும் உள்ளன. இப்பாக்களில்கோயில் (1-11), திருப்பூந்தராய் (12-22), திருப்புகலி (23-33), திருஆவடுதுறை (34-44), திருப்பூந்தராய் (45-55), திருக்கொள்ளம்பூதூர் (56-66),

TEACHER'S CARE ACADEMY

திருப்புகலி (67-77), திருக்கடவூர்வீரட்டம் (78-88), திருவீழிமிழலை (89-99), திருஇராமேச்சுரம் (100-109), திருப்புனவாயில் (110-120), திருக்கோட்டாறு (121-131), திருப்பூந்தராய் (132-142), திருப்பைஞ்ஞீலி (143-153), திருவெண்காடு (154-164), திருக்கொள்ளிக்காடு (165-175), திருவிசயமங்கை (176-186), திருவைகல்மாடக்கோயில் (187-197), திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில் (198-208), திருப்பூவணம் (209-219), திருக்கருக்குடி (220-230), திருப்பஞ்சாக்கரப்பதிகம் (231-241), திருவிற்கோலம்(242-251), திருக்கழுமலம் (252-262), திருந்துதேவன்குடி (263-273),திருக்கானப்பேர் (274-284), திருச்சக்கரப்பள்ளி (285-295), திருமழபாடி (296-306), மேலைத்திருக்காட்டுப்பள்ளி (307-317), திருஅரதைப்பெரும்பாழி (318-328), திருமயேந்திரப்பள்ளி (329-339), திருஏடகம் (340-349), திருஉசாத்தானம் (350-358), திருமுதுகுன்றம் (359-369), திருத்தென்குடித்திட்டை (370-380), திருக்காளத்தி (381-389), திருப்பிரமபுரம் (390-399), திருக்கண்டியூர்வீரட்டம் (400-410), திருஆலவாய் (411-421), தனித்திருவிருக்குக்குறள் (422-432), திருவேகம்பம் (433-443), திருச்சிற்றேமம் (444-454), சீகாழி (455-465), திருக்கழிப்பாலை (466-476), திருவாரூர் (477-487), திருக்கருகாவூர் (488-497), திருஆலவாய் (498-508), திருமழபாடி (509-519), நமச்சிவாயத்திருப்பதிகம் (520-530), திருத்தண்டலைநீணெறி (531-538), திருஆலவாய் (539-549), திருஆலவாய், திருவிராகம் (550-560), திருவானைக்கா திருவிராகம் (561-571), திருப்பாசுரம் (572-583), திருவான்மியூர் (584-593), திருப்பிரமபுரம் (594-604), திருவொற்றியூர் (605-615), திருச்சாத்தமங்கை (616-626), திருக்குடமூக்கு (627-637), திருவக்கரை (638-648), திருவெண்டுறை (649-659), திருப்பனந்தாள் (660-670), திருச்செங்காட்டங்குடி (671-681), திருப்பெருவேளூர் (682-691), திருக்கச்சிநெறிக்காரைக்காடு (692-702), திருவேட்டக்குடி(703-713), திருப்பிரமபுரம் (714-725), திருக்கயிலாயம் (726-736), திருக்காளத்தி(737-747), திருமயிலாடுதுறை (748-758), திருவைகாவூர் (759 - 769), திருமாகறல் (770-780), திருப்பட்டீச்சரம் (781-791), திருத்தேவூர் (792-802), திருச்சண்பைநகர் (803-813), திருவேதவனம் (814-823), திருமாணிகுழி(824-835), திருவேதிகுடி (835-846), திருக்கோகரணம் (847-856), திருவீழிமிழலை (857-867), திருத்தோணிபுரம் (868-878), திருஅவளிவணல்லூர் (879-889), திருநல்லூர் (890-900), திருப்புறவம்(901-911), திருவீழிமிழலை (912-922), திருச்சேறை (923-933), திருநள்ளாறு (934-944), திருவிளமர் (945-955), திருக்கொச்சைவயம் (956-966), திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் (967-977), திருவடகுரங்காடுதுறை (978-988), திருநெல்வேலி (989-998), திருஅம்பர்மாகாளம் (999-1009), திருவெங்குரு (1010-1019), திருஇன்னம்பர்(1020-1030), திருநெல்வெண்ணெய் (1031-1041), திருச்சிறுகுடி (1042-1052), திருவீழிமிழலை (1053-1063), திருமுதுகுன்றம் (1064-1071), திருத்தோணிபுரம் (1072-1078), திருஇராமேச்சுரம் (1079-1089), திருநாரையூர் (1090-1100), திருவலம்புரம்(1101-1111), திருப்பருதிநியமம் (1112-1122), திருக்கலிக்காமூர் (1123-1133), திருவலஞ்சுழி (1134-

TEACHER'S CARE ACADEMY

1144), திருநாரையூர் (1145-1155), திருஆலவாய் (1156-1166), கூடச்சதுக்கம் (1167-1177), திருப்பிரமபுரம் (1178-1189), திருவீழிமிழலை (1190-1200), திருப்பல்லவனீச்சரம் (1201-1211),திருக்கழுமலம் (1212-1223), திருவேகம்பம்(1224-1234), திருஆலவாய் (1235-1245), திருவீழிமிழலை (1246-1256), சீகாழி (1257-1267), திருக்கழுமலம் (1268-1278), திருவீழிமிழலை (1279-1289), திருஆலவாய் (1290-1300), திருப்பந்தணநல்லூர் (1301-1310), திருஓமமாம்புலியூர்(1311-1320), திருக்கோணமாமலை (1321-1330), திருக்குருகாவூர் (1331-1336), திருநல்லூர்ப்பெருமணம் - (1337-1347) ஆகிய 125 தலங்கள் பற்றிப் பாடப்பட்டுள்ளன.

**"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**

**ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது**

**வேத நான்கினும் மெய்ப்பொருளாவது**

**நாதனாம நமச்சி வாயமே"**

**திருஞானசம்பந்தர்**

- இயற்பெயர் ஆளுடைய பிள்ளை. பெற்றோர் சிவபாதஇருதயர், பகவதியம்மை.
- ***சீர்காழி***யில் சித்திரை மாதம் திருவாதிரை நாளில் அந்தணர் குலத்தில் பிறந்தார். **UGC NET 2017**
- பதினாறு ஆண்டுகளே வாழ்ந்த இவர் வைகாசி மாதம் மூல நட்சத்திர நாளில் திருப்பெரமணநல்லூரில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட இடம் சீர்காழி.
- காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு (முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தலைவன் சிறுத்தொண்டர் இவரது நண்பர்.)
- கிரியை எனும் சத்புத்திர மார்க்கத்தையும் மகன்மை நெறியையும் பின்பற்றியவர். (சத்புத்திர மார்க்கம் என்பது தந்தை மகன் உறவு)
- இவர் பாடிய பதிகங்கள் 16000 என நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுகிறார். எனினும் நமக்குக் கிடைத்த பதிகங்கள் 384, பாடல்கள் 4213.
- 220 தலங்கலுக்குச் சென்று இறைவனை வணங்கி 23 வகை பண்களைப் பயன்படுத்திப் பாடியுள்ளார். தன்னைத் தானே தமிழ் ஞானசம்பந்தன் என்று அழைத்துக்கொள்வார்.
- திருஞானசம்பந்தரை வழிபட்டவர் கணநாட நாயனார்.
- சிவனின் பல்வேறு தோற்றப் பொலிவைத் தன் பாடலில் பாடியவர். திருஞானசம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி 6 பிரபந்தங்கள் பாடியுள்ளார்

**வேறுபெயர்கள்**

- காழிவள்ளல்,
- காழியர்கோன்,

TEACHER'S CARE ACADEMY

- திருஞானம் பெற்ற பிள்ளை,
- முத்தமிழர்கரன்,
- மறைபயில் திப்பிய வாசகன்,
- கலைவித்தகன்,
- செழுமலையத் தமிழ்க்கேசரி
- காழி நாடுடைய பிள்ளை,
- ஆணை நமதென்ற பெருமான்,
- பரசமய கோளரி (கூறியவர் சேக்கிழார், பொருள் - **பிற சமயத்தவருக்குச் சிங்கம் போன்றவர்) UGC NET 2009**
- இன்தமிழ் ஏசுநாதர்,
- சத்புத்திரன்,
- முருகனின் அவதாரம்,
- கவுணியர் கோமான்,
- சந்தத்தின் தந்தை (110 சந்தங்களைப் பாடியுள்ளார்),
- ஞானத்தின் திருவுரு, முக்திவிரகன், தமியாகரன் (சேக்கிழார்)
- நான்மறையின் தனித்துணை,
- பக்தி இலக்கியத்தின் முன்னோடி

**புகழ்மொழிகள்**

- நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தம், கல்லாமல் கற்றவன், “கொன்றையான் அடியலார் பேணா எம்பிரான் சம்பந்தன்” (திருத்தொண்டத் தொகை) என்று சுந்தரர் புகழ்ந்து பேசுகிறார்.
- திராவிட சிசு (ஆதிசங்கரர் தம்முடைய சௌந்தர்ய லகரி என்னும் நூலில்)
- சைவசிகாமணி என்று நம்பியாண்டார் நம்பி சம்பந்தரைப் புகழ்ந்துள்ளார்.
- “பிள்ளைபாதி புராணம்பாதி” என்று இவர் வரலாற்றுக்குப் பெரியபுராணத்தில் சிறப்பு கொடுத்துள்ளார் சேக்கிழார். பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் குறித்து 1256 அடிகள் பாடியுள்ளார்.
- மேலும் வேதநெறி தழைத்தோங்க, சைவத்துறை சிறந்து விளங்க இவர் தோன்றினார் என்றும் பாராட்டுகின்றார் சேக்கிழார்.
- பதிகம், மாலைமாற்று, சக்கரமாற்று, பல்பெயர்பத்து, கோமுத்திரி, அந்தாதி, இயமகம், திருப்பாசுரம், முக்கால் போன்ற இலக்கிய வகைகளை அறிமுகம் செய்ததால் அவரைச் சேக்கிழார் மூல இலக்கியம் எனப் பாராட்டியுள்ளார்.

TEACHER'S CARE ACADEMY

**நிகழ்த்திய அற்புதங்கள்**

- மூன்று வயதில் பசியால் அழுதபொழுது ஞானப்பால் ஊட்டிய இறைவியின் பெயர் பெரியநாகியம்மை, இறைவ தோணியப்பர், இடம் சீர்காழி.
- இவர் திருக்கோலக்காவில் பொற்றாளம், திருவாவடுதுறையில் பொற்கிழி, திருவிழிமிழலையில் படிக்காசு, திருவாயிலறத்துறையில் முத்துச்சிவிகை, பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தல் ஆகியவற்றைப் பெற்றார்.
- **திருபாலாச்சுரத்தில்** கொல்லி மழவனின் மகள் **முயலகன்** எனும் நோயால் பீடிக்கப்பட்டிருந்தபோது "மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே" என்று பாடிப் **பிணி நீக்கினார். UGC NET 2017**
- மதுரையில் தான் தங்கியிருந்த மடத்திற்குக் கூன்பாண்டியன் வைத்த நெருப்பை அவனுக்கே வெப்பு நோயாகப் பற்றச் செய்தார். அவன் மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட "மந்திரமாவது நீறு" என்று பாடி அவன் வெப்பு நோய் நீக்கி "நின்றசீர் நெடுமாறன்" ஆக்கினார்.
- **திருமருகலில் பாம்பு தீண்டிய விடத்தை நீக்க** "உடையாய் தகுமோ இவள் உள்மெலிவை" என்று பாடினார். **UGC NET 2017**
- செங்குன்றூரில் அடியாரின் குளிர் தீர்க்க "அவ்வினை இவ்வினை" என்று பாடினார்.
- **திருமறைக்காட்டில்** "இறக்கம் ஒன்றிலீர்" எனப் பாடிக் **கதவைத் திறக்கச் செய்தார். திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினார். UGC NET 2017**
- திருஏடகத்தில் இவர் வைகையாற்றில் இட்ட ஏடுகள் எதிரில் நீந்தி கரை ஏறியது. மதுரையில் அனல்வாதம், புனல்வாதம் செய்து சமணர்களைத் தோற்கடித்தார்.
- மதுரையில் வாதம் செட்வதற்கு அழைத்த புத்த நந்தியின் தலையை"வாழ்க அந்தணர் வானவர் ஆனிமை" என்று பாடித் துண்டாக்கினார்.
- மயிலாப்பூரில் பாம்பு தீண்டி இறந்த பூம்பாவையைக் "காணாதே போதியோ பூம்பாவாய்" எனப் பாடி குடத்துச் சாம்பலிலிருந்து உயிர் பெறச் செய்தார்.

**சிறப்புகள்**

- திருஞான சம்பந்தரின் பாடல்களைத் திருநீலகண்ட யாழப்பாணர் யாழில் பாடினார். இவரின் மனைவி மதங்கசூளாமணி.
- திருஞானசம்பந்தருக்கு மட்டுமே யாழ் முரி பதிகம் உண்டு.
- ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் முதன்முதலாக திருப்புகலூரில் சந்தித்தனர். திருப்பூந்துருத்தியில் திருஞான சம்பந்தரின் பல்லக்கைத் திருநாவுக்கரசர் சுமந்தார்.
- நமச்சியவாயப் பதிகத்தில் 8ம்பாடல் இராவணனைப் பற்றிக் கூறுகின்றது. 9ம்பாடல் பிரம்மன், திருமாலைவிடச் சிவன் உயர்ந்தவர் என்று கூறுகின்றது. 11ம் பாடல் சமணத்தை எதிர்த்துத் தன் பெயரையும் அப்பாடல் பயனையும் உரைக்கிறது.

TEACHER'S CARE ACADEMY

# COLLEGE TRB

# தமிழ்

2024-2025



TEACHER'S CARE PUBLICATION
38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502
Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080

*Your Success is Our Goal...*

# UNIT-4

# இக்கால இலக்கியங்கள்

tcaexamguide@gmail.com
Teachers Care Academy
www.tcaexamguide.com
tcaexamguide

9360268118
7639967359
6369036346
9566535080

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## அலகு – IV

## இக்கால இலக்கியங்கள்



**COMPETITIVE EXAM**

**FOR**

**ASSISTANT PROFESSOR TRB 2024 - 25**

## INDEX


| | அலகு - 4 | P.N. |
|---|---|---|
| | 1.0. தேசிய இயக்கப்பின்னணியில் பாரதியார் | 1 |
| | 1.1. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை | 4 |
| | 1.2. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை | 10 |
| | 1.3 சுத்தானந்த பாரதியார் | 15 |
| | 1.4 திராவிட இயக்கப் பின்னணியில் பாரதிதாசன் | 16 |
| | 1.5. முடியரசன் | 20 |
| | 1.6. கவிஞர் சுரதா | 21 |
| | 1.7. பொதுவுடைமை நோக்கில் தமிழ் ஒளி | 22 |
| | 1.8. தணிகைச் செல்வன் | 23 |
| | 1.9. பரிணாமன் | 24 |
| | திரைப்படப் பாடலாசிரியர்கள் | |
| | 2.0. பாபநாசம் சிவம் | 25 |
| | 2.1. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் | 26 |
| | 2.2. உடுமலை நாராயணகவி | 27 |
| | 2.3. கவி.கா.மு.ஷெரிப் | 27 |
| | 2.4. கவிஞர் கண்ணதாசன் | 28 |
| | 2.5. மருதகாசி | 29 |
| | 2.6. கவிஞர் வாலி | 29 |
| | 2.7. கவிஞர் வைரமுத்து | 29 |
| | 2.8. அறிவுமதி | 31 |
| | 2.9. நா.முத்துக்குமார் | 31 |
| | 2.10. பா.விஜய் | 31 |
| | 2.11. தாமரை | 32 |
| | அகவயத் தேடலைக் கவிதைகளாக்கிய போக்கு | |
| | 3.0.ந. பிச்சமூர்த்தி | 33 |
| | 3.1.மயன் | 34 |
| | 3.2. பசுவய்யா | 36 |
| | 3.3. அபி | 37 |
| | 3.4. அப்துல் ரகுமான் | 38 |
| | 3.5. ஞானக்கூத்தன் | 40 |
| | 3.6. பிரமிள் | 42 |

| | | |
|---|---|---|
| | 3.7.ஆத்மாநாம் படைப்புகள் | 42 |
| | 3.8. சுகுமாரன் | 43 |
| | 3.9. தேவதேவன் | 43 |
| | 3.10. தேவதச்சன் | 44 |
| | 3.11. மனுஷ்யபுத்திரன் | 44 |
| | 3.12. யவனிகா ஸ்ரீ ராம் | 45 |
| | 3.13. என்.டி.ராஜ்குமார் | 46 |
| | 3.14. நா. காமராசன் | 47 |
| | 3.15.மு.மேத்தா | 47 |
| | 3.16. சிற்பி | 48 |
| | 3.17. மீரா | 50 |
| | 3.18. புவியரசு | 51 |
| | 3.19. தமிழன்பன் | 52 |
| | 3.20. தமிழ் நாடன் | 52 |
| | 3.21. இன்குலாப் | 53 |
| | 3.22. ஹெச்.ஜி.ரசூல் | 54 |
| | 3.23. பழமலய் | 54 |
| | 3.24. காலாப்ரியா | 55 |
| | 3.25. கல்யாண்ஜி | 56 |
| | 3.26. தமிழச்சி தங்கப்பாண்டியன் | 57 |
| | 3.27. இரா. மீனாட்சி | 58 |
| | 3.28. வைகைச்செல்வி | 58 |
| | 3.29. சல்மா | 59 |
| | 3.30. கனிமொழி | 59 |
| | 3.31. உமா மஹேஸ்வரி | 59 |
| | 3.32. சுகிர்தராணி | 60 |
| | 3.33. சக்திஜோதி | 60 |
| | 3.34. இளம்பிறை | 61 |
| | 3.35. புதிய மாதவி | 61 |
| | 3.36. ஹைக்கூ | 62 |
| | 3.37. சென்ட்ரியூ | 63 |

| | | |
|---|---|---|
| | 3.38. லிமரிக் | 64 |
| | 3.39. லிமரைக்கூ | 64 |
| | 3.40. கஜல் | 64 |
| | 3.41. போன்சாய் கவிதைகள் | 65 |
| | சிறுகதைகள் படைப்புகள் | |
| | 4.0.வ.வே.சு.அய்யர் | 67 |
| | 4.1.புதுமைப்பித்தன் | 68 |
| | 4.2.மௌனி | 71 |
| | 4.3.லா.ச.ராமாமிர்தம் | 72 |
| | 4.4. பி.எஸ். ராமையா | 73 |
| | 4.5. கு.அழகிரிசாமி | 73 |
| | 4.6. வல்லிக்கண்ணன் | 74 |
| | 4.7.கு.ப. ராஜகோபாலன் | 77 |
| | 4.8. விந்தன் | 79 |
| | 4.9. அகிலன் | 80 |
| | 4.10. வண்ணதாசன் | 80 |
| | 4.11. ஆஸ்வகோஷ் | 81 |
| | 4.12. ஜெயந்தன் | 82 |
| | 4.13. மா.அரங்கநாதன் | 83 |
| | 4.14. அம்பை | 84 |
| | 4.15. ஆர். சூடாமணி | 85 |
| | 4.16. கந்தர்வன் | 86 |
| | 4.17. தமிழ்ச்செல்வன் | 87 |
| | 4.18. பா.செயபிரகாசம் | 88 |
| | 4.19. பாவண்ணன் | 88 |
| | 4.20. கோணங்கி | 89 |
| | புதினங்கள் | |
| | 5.0. மாயூரம் வேதநாயகம் பிள்ளை | 90 |
| | 5.1. இராஜம் அய்யர் | 92 |
| | 5.2. அ.மாதவையா | 93 |
| | 5.3. கல்கி | 95 |
| | 5.4. மு.வரதராசன் | 96 |
| | 5.5. க.நா.சுப்பிரமண்யன் | 101 |
| | 5.6. ஆர்.சண்முக சுந்தரம் | 104 |

| | | |
|---|---|---|
| | 5.7. ஜெயகாந்தன் | 106 |
| | 5.8. தி. ஜானகி ராமன் | 107 |
| | 5.9. கி. ராஜ நாராயணன் | 109 |
| | 5.10. சா. கந்தசாமி | 110 |
| | 5.11. சுந்தர ராமசாமி | 111 |
| | 5.12. அசோகமித்திரன் | 112 |
| | 5.13. ராஜம் கிருஷ்ணன் | 114 |
| | 5.14. இந்திரா பார்த்தசாரதி | 117 |
| | 5.15. ஆதவன் | 119 |
| | 5.16. நீல. பத்மநாபன் | 120 |
| | 5.17. எம்.வி.வெங்கட் ராம் | 124 |
| | 5.18. நாஞ்சில் நாடன் | 125 |
| | 5.19. தோப்பில் முகம்மது மீரான் | 127 |
| | 5.20. திலகவதி | 128 |
| | 5.21. பிரபஞ்சன் | 129 |
| | 5.22. பூமணி | 131 |
| | 5.23. பொன்னீலன் | 131 |
| | 5.24. சு. சமுத்திரம் | 132 |
| | 5.25. டி. செல்வராஜ் | 133 |
| | 5.26. வண்ண நிலவன் | 135 |
| | 5.27. மேலாண்மை பொன்னுசாமி | 136 |
| | 5.28. சிவகாமி | 137 |
| | 5.29. இமையம் | 137 |
| | 5.30. தஞ்சை பிரகாஷ் | 139 |
| | 5.31. கீரனூர் ஜாகீர் ராஜா | 140 |
| | 5.32. ஜெய மோகன் | 141 |
| | 5.33. எஸ். கிருஷ்ணன் | 147 |
| | 5.35. பாமா | 148 |
| | 5.36. சோ. தர்மன் | 149 |
| | 5.37. ஜோ.டி.குருஸ் | 150 |
| | 5.1.0. படைப்புகளும் ஆசிரியர்களும் | 150 |
| | 5.1.1. சாகித்திய அகாடாமி விருதுபெற்ற தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் அவரது படைப்புகளும் | 152 |
| | 5.1.2. யுவ புரஸ்கார் விருதுகள் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் | 154 |

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**
**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**
**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**
**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge),Salem**
**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# COLLEGE TRB – TAMIL – 2024-25

## அலகு – 4

# இக்கால இலக்கியங்கள்

### 1.0.தேசிய இயக்கப்பின்னணியில் பாரதியார் (11.12.1882 - 11.09.1921)

- பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம் ஆகும். அவரது தந்தை பெயர் சின்னசாமி ஐயர், தாயார் பெயர் இலட்சுமி அம்மாள் ஆவார். இவரது ஊர் எட்டையபுரம் ஆகும். பாரதியாரின் மனைவி பெயர் செல்லம்மாள் ஆவார்.

**பாரதியாரின் புனைப் பெயர்கள்**

- காளிதாசன், சக்திதாசன், சாவித்திரி, ஓர் உத்தம தேசாபிமானி, நித்திய தீரர், ஷெல்லிதாசன்.

**பாரதியாரின் சிறப்புப் பெயர்கள்**

- பாரதியாருக்கு சிறப்புப் பெயர்களை வழங்கியவர்களின் பெயர்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.
  - ✓ பாட்டுக்கொரு புலவன் (கவிமணி)
  - ✓ பைந்தமிழ்த் தேர்ப்பாகன் (பாரதிதாசன்)
  - ✓ சிந்துக்குத் தந்தை (பாரதிதாசன்)
  - ✓ நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா (பாரதிதாசன்)
  - ✓ காடு கமழும் கற்பூரச் சொற்கோ (பாரதிதாசன்)
  - ✓ தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி
  - ✓ தேசியக்கவி, விடுதலைக்கவி, அமரக்கவி, முன்னறி புலவன், மகாகவி, உலககவி, வரகவி

**பாரதியார் எழுதிய உரைநடை நூல்கள்**

- ஞானரதம் (தமிழின் முதல் உரைநடை காவியம்),
- தராசு, சந்திரிகையின் கதை, மாதர், கலைமகள்.

**பாரதியார் எழுதிய கவிதை நூல்கள்**

❖ கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், காட்சி (வசன கவிதை), புதிய ஆத்திச்சூடி, பாப்பாபாட்டு, பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி, பாரத தேவியின் திருத்தசாங்கம், விநாயகர் நான்மணிமாலை.

**பாரதியார் எழுதிய சிறுகதைகள்**

❖ திண்டிம சாஸ்திரி, பூலோக ரம்பை, ஆறில் ஒரு பங்கு, ஸ்வர்ண குமரி, சின்ன சங்கரன் கதை, நவதந்திரக் கதைகள், கதைக்கொத்து (சிறுகதை தொகுப்பு).

**பாரதியார் எழுதிய நாடகம்** : ஜெகசித்திரம்

**பாரதியாரைப் பற்றிய பிற செய்திகள்**

❖ எட்டையபுர சமஸ்தானப் புலவர்கள் 'பாரதி' என்ற பட்டத்தை அளித்தனர். பாரதி தம்மை 'ஷெல்லிதாசன்' என அழைத்துக் கொண்டார். தம் பூணூலை கனகலிங்கம் என்ற ஆதி திராவிடற்கு அளித்தவர். 1905-இல் 'சக்கரவர்த்தினி' என்ற இதழைத் தொடங்கினார். கர்மயோகி, பாலபாரதி ஆகிய இதழ்களையும் நடத்தினார். பாரதி ‘சுதேசமித்திரன்' என்ற இதழின் துணையாசிரியராகப் பணி புரிந்தார்.

❖ ‘இந்தியா' என்ற இதழின் ஆசிரியராகப் பணி புரிந்தார், ‘சென்னை ஜனசங்கம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார். நிவேதிதா தேவியைச் சந்தித்த பின் பெண் விடுதலைக்காகவும் தேச விடுதலைக்காகவும் தீவிரமாகப் பணியாற்றினார். இவரின் ஞானகுரு 'நிவேதிதா தேவி'

❖ பாரதியார் உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் 'வசனகவிதை' எனப்படுகிறது. இது ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) எனப்படுகிறது.

❖ இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. உணர்ச்சி பொங்க கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தைக் கையாண்டுள்ளார். புதுக்கவிதைகள் தோன்றுவதற்கு இவ்வடிவம் காரணமாயிற்று.

❖ பாரதியாரின் அரசியல் குரு 'பாலகங்காதர திலகர், இவர் 14 மொழிகளை அறிந்தவர், பரலி நெல்லையப்பரை 'தம்பி' என அழைத்தார், பாரதியாரின் பாடல்களை முதன்முதலில் மக்களுக்கு அறிமுகம் செய்தவர் பரலி நெல்லையப்பர், பாரதியாரின் பாடல்களை முதன்முதலில் வெளியிட்டவர் கிருஷ்ணசாமி ஐயர் ஆவார். பாரதியின் படத்தை வரைந்தவர் 'ஆர்ய பாஷ்யம்' என்பவர்.

❖ பாரதியாருக்கு 'மகாகவி' என்ற பட்டத்தை வழங்கியவர் வ.ரா. (ராமசாமி ஐயங்கார்)

❖ பாரதி சங்கத்தை தொடங்கியவர் கல்கி.

❖ மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரிந்தார்.

❖ இவரின் பாடல் முதன்முதலில் வெளிவந்த இதழ் 'விவேகபானு' (1904). பாடலின் தலைப்பு - தனிமை இரக்கம்.

❖ பாரதியார் கீதையை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

- ❖ இவர், பதஞ்சலி சூத்திரத்திற்கு உரை எழுதியுள்ளார்.
- ❖ தாகூரின் (11) சிறுகதைகளைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.
- ❖ உரைநடை என்பது 'கூடியவரை பேசுவது போலவே இருக்க வேண்டும்' என்று கூறியவர்.
- ❖ தமிழில் முதன்முதலில் கருத்துப் படங்களை வெளியிட்டவர்.
- ❖ கவிதையில் சுயசரிதம் எழுதிய முதல் கவிஞர்.
- ❖ அனைவரும் 'தாய்நாடு' எனக் கூற பாரதி பட்டும் 'தந்தையர் நாடு' என்று கூறினார்.
- ❖ பாரதியின் கடிதங்களை 'பாரதியின் கடிதங்கள்' என்ற பெயரில் நூலாக முதன் முதலில் பதிப்பித்தவர் ரா.ஆ. பத்மநாபன் ஆவர்.

**பாரதியார் பற்றிய பாராட்டுரைகள்**

- ❖ "பாரதியார் ஓர் அவதாரப் புருஷர். இவர் நூலைத் தமிழர் வேதமாகக் கொள்ள வேண்டும்" - பரலி நெல்லையப்பர்.
- ❖ "பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம்ன் சுருக்கென்று ஏறும்; இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்பு உண்டாகும்" - நாமக்கல் கவிஞர்
- ❖ "இவரின் பாப்பா பாட்டில் நாமக்கல் கவிஞர். நெஞ்சைப் பறிகொடுத்தேன்"- கவிமணி.
- ❖ "அவனுக்கு (பாரதி) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மெட்டும் தெரியும்; ஜப்பானிய ஹைக்கூ லாவகமும் புரியும். தாகூரையும் அறிவான்; வால்ட் விட்மனின் புதுக்கவிதை ஒளியையும் உணர்வான், காளிதாசனான அவன் ஷெல்லிதாசனாகவும் தன்னை அறிவித்துக் கொண்டவன். சுதந்திரத்தையும் பெண் உரிமையையும் புதுயுகக்கனவுகளையும் நவநவமான மொழிகளில் பேசியவன்" - சிற்பி.பாலசுப்பிரமணியம்.
- ❖ "இவருடைய பாடல்களில் கருத்தாழமும், ஆற்றலும், அமையக் காண்கிறோம். இவ்வளவு சிறந்த கவிஞர் தமிழுலகில் சில நூற்றாண்டுகளாகத் தோன்றவில்லை"

  - எஸ். வையாபுரிப்பிள்ளை.

**பாரதியாரைப் பற்றிய மேற்கோள்கள்**

- ❖ "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிப் போல் இனிதாவது காணோம்"
- ❖ "சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத் தொழுது படித்திட்டி பாப்பா"
- ❖ “மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்”
- ❖ “ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை சாதியில்”
- ❖ “உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்"
- ❖ "முப்பதுகோடி முகமுடையாள் செப்புமொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தனை ஒன்றுடையாள்
- ❖ “பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்ந்த வேண்டும் இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்”
- ❖ "ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி”

TEACHER' S CARE ACADEMY

- "பாருக்குள்ளே நல்ல நாடு"
- "நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்"
- "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று"
- "வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"
- "காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்குவோம்"
- "தனியொருவனுக் குணவிலை யெனில் சகத்தினை அழித்திடுவோம்"
- "வாழிய செந்தமிழ்; வாழ்கநற் றமிழர்"
- "தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் - ஆனால் மறுபடியும் தருமம் வெல்லும்"
- "செந்தமிழ் நாடென்ற போதினிலே -இன்பத்தேன் வந்து பாது காதினிலே'
- பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப் பழமையிருந்த நிலை - கிளியே பாமார் ஏதறிவார்
- "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்"
- "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"
- “தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்”
- "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"
- "பெண்மை வெல்க என்று கூத்திடுவோம்"
- தமிழக அரசு முதன்முதலில் நாட்டுடைமையாக்கிய நூல்களின் ஆசிரியர் – **பாரதி, பாரதிதாசன்,கல்கி, நாமக்கல் கவிஞர் [26 Tamil Dec 2018 Set 2]**
- **அம்மாக்கண்ணுப்பாட்டு என்னும் பாடலை இயற்றியவர் பாரதியார் ஆவார் [26 Tamil June 13, 2018 Paper 1, 2, with answer key and 2013 same]**

## 1.1 கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

- கவிதை கல்வெட்டு, மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகளிலும் தம் ஆளுமையைப் பதித்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. கவிதையோடு சிலத்து கவிதையாகவே வாழ்ந்தவர்.
- கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் 1876ஆம் ஆண்டு சிவதாணு பிள்ளைக்கும், ஆதிலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். பழைய புதிய மரபுகளுக்கு இடையே பாலம் கட்டியவர்.
- கோட்டாறு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்த அவர் பின்னர் திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றலானார்.
- கவிமணி முதலில் எழுதிய 'அழகம்மை ஆசிரிய விருத்தம் நூல் 1895இல் வெளியானது. 1916இல் 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் அங்கதச்சுவை கொண்ட நூலினை வெளியிட்டார். 1931ஆம் ஆண்டில் பணிநிறைவு பெற்ற அவர் 1936இல் 'காந்தளூர்ச்சாலை' என்னும் வரலாற்று ஆராய்ச்சி நூலினை வெளியிட்டார்.

- தமிழிலக்கியத்தில் 'குழந்தையிலக்கியம்' எனும் ஒரு துறையை முழுமையாக மலரச் செய்து, மணம் வீச வைத்த பெருமை கவிமணியையே சாரும். பாரதி தொடங்கி வைத்த பாப்பா பாட்டை, பாப்பா இலக்கியமாகவே மாற்றி 1938இல் 'மலரும் மாலையும்' எனும் நூலாக வெளியிட்ட கவிமணியைக் 'குழந்தை இலக்கியத்தின் தந்தை' எனலாம். 1940இல் 'கவிமணி" எனும் பட்டம் பெற்ற இவர் எட்வின் ஆர்னால்டின் 'Light of Asia' நூலினைத் தழுவி புத்தர் வரலாறினைக் கூறும் 'ஆசிய ஜோதி' என்னும் நூலினை வெளியிட்டார்.
- 1945இல் உமர்கய்யாம் பாடல்களையும், 1953இல் 'கவிமணியின் உரைமணிகள்' என்ற நூலையும், 'தேவியின் கீர்த்தனங்கள்' என்ற இசை நூலினையும் வெளியிட்டார். ஆங்கிலத்தில் 17 கட்டுரைகள் எழுதியுள்ளார். 1954 செப்டம்பர் 26 இல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இயற்கை எய்தினார்.
- கவிமணியைப் பற்றி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் கூறும் பொழுது,

**"துரும்பென மெலிந்த தேகம்**
**துலங்கிடும் குளிர்ந்த பார்வை**
**இரும்பினும் வலிய உள்ளம்**
**இனியவே செய்யும் எண்ணம்**
**பரம்பொருள் நினைவே காட்டும்**
**பாரெலாம் பரந்த நோக்கம்**
**கரும்பினும் இனிய சொற்கள்**
**'கவிமணி' வடிவ மாகும்"** என்று கூறுவார்.

- 'கவிதைக்கு இலக்கணம் கண்டவர் கவிமணி

**"உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை**
**தெரிந்துரைப்பது கவிதை"** எனத் தெளிவாக, சுருக்கமாக கவிதைக்குரிய இலக்கணத்தை வரையறுத் துள்ளார்.

- எளிய சொற்கள், உயர்ந்த கருத்து, விழுமிய ஓசை இவை அனைத்தும் கவிமணியின் கவிதைகளின் தனித்த தன்மைகளாகும். கோவில் வழிபாடு என்னும் கவிதையில் கோவில் முழுதுங் கண்டும். உயர்கோபுரம் ஏறிக் கண்டும், தேவாதி தேவனைக் காணமுடியவில்லை. பின் அவன் எங்குள்ளால் என்றால்,

**"உள்ளத்தில் உள்ளான், அடி - அது நீ**
**உணர வேண்டும், அடி!**
**உள்ளத்தில் காண்பாய், எனில் கோயில்**
**உள்ளேயுங் காண்பாய், அடி"** என்று எல்லோர் உள்ளத்திலும் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்கிறார்.

TEACHER' S CARE ACADEMY

- கவிமணி ஒரு **குழந்தைக் கவிஞர்** குழந்தைமைக் கவிஞர் அல்லர். குழந்தையை முல்லை நறுமலர், முருகவிழ்க்குந் தாமரை, மல்லிகைப்பூ, மருக்கொழுந்து சண்பகம் என்றெல்லாம் தாலாட்டின் மூலம் பெயரிட்டழைக்கின்றார்."ஆசிய ஜோதியில் குழந்தையை இழந்த தாயின் வருத்தத்தினை சுஜாதை என்னும் பெண்ணின் மூலம் காட்டுகிறார்.

**"பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூச் சூட்டிடம்மா**

**என்னும் மொழிகளினி எக்காலம் கேட்பனையா?**

**நெஞ்சிற் கவலையெல்லாம் நிற்காமல் ஓட்டும் அந்தப்**

**புஞ்சிரிப்பைக் காணாது புத்தி தடுமாறுதையா!"** என்று கூறும் பொழுது படிப்போர் மனம் கசிந்துருகும்.

**"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே**

**துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி**

**அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்**

**அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி"**

- என அன்பின் அடிக்களத்தைப் பசுவும் கன்றும் மூலம் விளக்குவதைக் காணலாம். பசு பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைத்தது வதை பக்குவஞ் செய்தாய்?" என்று கேள்வி எழுப்புவதன் மூலம் குழந்தைகள் உள்ளத் தில் அறிவியல் வினாவை எழுப்ப முயலுகிறார்.
- உமர்கய்யாம் பாரசீக மொழியில் பாடிய உமர்கய்யாம் பாடலை பிட்ஜிரால்ட் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அதளைக் கவிமணி

**வெய்யிற் கேற்ற நிழலுண்டு**
**வீசும் தென்றல் காற்றுண்டு**
**கையில் கம்பன் கவியுண்டு**

- எனத் தமிழ் மரபிற்கு ஏற்ற வகையில் மொழிபெயர்ப்புச் செய்து மூலத்தை விஞ்சி நிற்கச் செய்கிறார்.
- கவிமணி பெரும்பாலான பாடல்களில் தம்மை மறைத்துக் கொண்டு தாயாக ஆசிரியராக குழந்தையாக, அண்ணனாக தோழியாகக் குரல் கொடுப்ப தைக் காணலாம். உலகில் பிறக்கும் குழந்தைகள் முதன்முதலில் தன்னை இழப்பது தாயின் தாலாட்டிலாகும்.

**ஆராரோ? ஆராரோ?**

**ஆரிவரோ? ஆராரோ?**

**மாமணியோ? முத்தோ?**

**மரகதமோ? மன்னவர்தம்,**

- என்று தாயின் பரிபக்குவ உள்ள நிலையில் கவிமணி குழந்தைகளைத் தாலாட்டின் மூலம் அணுகுவது சிறப்பானதாகும்.
- 'உடல்நலம் பேணல்' என்னும் பாடலில்

**"கூழையே நீ குடித்தாலும்**

**குளித்தபிறகு குடி அப்பா!**

**ஏழையே நீ ஆனாலும்**

**இரவிலே நன்றாய் உறங்கப்பா!"**

- என்று மாணவச் செல்வங்களுக்கு நல்லறம் போதிக்கும் பாங்கில் ஆசிரியராய்மாறி அறிவுரை பகர்கிறார்.
- குழந்தைகள் அன்றாடம் பார்த்து மகிழும் காக்கை, கோழி, நாய், கிவி போன்றவற்றையும் கவிமணி பாடுபொருளாக்குகிறார்.

**"கோழி! கோழி! வா வா!**

**கொக்கோ கோ என்று வா;**

**கோழி! ஓடி வா வா;**

**கொண்டைப் பூவைக் காட்டு வா.**

- என்று கோழியைப் பற்றிப் பாடினாலும் எல்லோருக்குமான வாழ்க்கைத் தத்துவத்தையே கூறிவிடுகின்றார்.

**"தங்கையே, பார்! தங்கையே, பார்!**

**சைக்கிள் வண்டி இதுவே பார்!**

- என்று காட்சியைக் கருத்துச் சுவையுடன் காட்டும் போது கவிமணி அண்ணவாகக் காட்சி தருகிறார்.
- கவிமணி தோழியாகவும் மாறிக் குழந்தைகளுக்கு உறுதுணை நல்குவதைப் புலிக்கூடு, பாண்டியாடுதல் போன்ற பாடல்கள் வழி காணலாம்.

**பாண்டியாடுதலில்,**

**பாங்கி தோழி பங்கஜம்**

**பாண்டியாட வாராயோ?"**

- என தோழிச் சிறுமி பங்கஜத்தை அழைப்பதைக் காணலாம்.
- தம்மை ஒரு கவிஞராகக் கொண்டு, தமது கூற்றாகக் கவிமணி பாடல் யுள்ள தலைமத்துள்ளார். 'நாய்' என்னும் பாடலில் நாயின் திறனையும் நன்றி யுள்ளத்தையும்,

**‘வீட்டு வாசல் காப்பவன்**

**வேட்டையாட வல்லவன்**

**உண்ட சோற்றை வண்ணியே**

**உயிரும் விடத் துணியவன்"** என்று கூறுகிறார்.

- "வாழ்க்கைத் தத்துவங்கள்" என்னும் பகுதியில் ஒருவன் உயர்விற்கு அவரவதம் செயல்களே காரணம் என்பதை."

**உள்ளத் தேறிச் செய்வினையில்**

**ஊக்கம் பெருக உழைப்போமேல்,**

**பள்ளம் உயர்மே டாகாதோ?**



TEACHER' S CARE ACADEMY

**பாறை பொடியாய்ப் போகாதோ?"**

- என்று அழகுறப் பாடுவார். தீண்டாமைப் பேயினால் நாட்டில் கலவரங்கள் நிகழ்வது கண்டு கலங்கிய கவிமணி.

**இப்பெரும் பேய் இனி மேலும் - நமது**

**இந்திய நாட்டில் இருந்திடலாமோ?**

**கப்பலில் ஏற்றுவோம், ஐயா! -நடுக்**

**காயல் கடல் கண்டு தள்ளுவோம் ஐயா!"**

- என்று பாடித் தீண்டாமைப் பேயைக் கடலில் தள்ள வேண்டுமெனப் பாடுகிறார் காந்தியக் கொள்கைக்கு ஆட்பட்ட கவிமணி மதுவிலக்குப் பாடல்களை யும் பாடியுள்ளார். 'கள்' அரக்கனுக்கு இந்தியாவில் இடமில்லை என்றும் கூறு கிறார்.
- பெண்ணின் பெருமை பேசாத தமிழ்ப் புலவர்கள் எவருமில்லை. கவிமணியும் அதற்கு விதிவிலக்கல்ல. பெண்ணினைப் போற்றுவது பண்பினை, அன்பினை, தாய்மையினை, மென்மையினைப் போற்றுவதற்கு ஒப்பாகும் என்பார்.

**மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல**

**மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!**

**பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்**

**பாரில் அறங்கள் வளரும், அம்மா"** என்று பெண்மையினைப் போற்றுகிறார்.

- நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் சமுதாய மக்களிடம் காணப்பட்ட குறைபாடுகளை அங்கதச் சுவை ததும்பச் சுட்டிக்காட்டுவது 'மருமக்கள் வழி மான்மியம் பஞ்சகல்யாணிப் பிள்ளைக்கு ஐந்தாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டவளின் துயரங்களை இது கூறுகிறது. தேவையில்லாமல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து அவதிக்குள்ளாவதை,

***கோர்ட்டுப் பீஸு குமஸ்தா பீஸ***
***கூடிக்காப்பி குடிக்கப் பீஸூ***
***வெற்றிலை வாங்க வோறொரு பீஸூ***
***வக்கில் பீஸு மகமைப் பீஸ்***
***வக்காலத்து வகைக்கொரு பீஸு"*** என்று கிண்டல் செய்கிறார் கவிமணி!"

- "தேசிக விநாயகம் பிள்ளை அவர்களிதெவிட்டல்கள் மிமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருஞ்செல்வம்: அரிய செல்வம்: தெவிட்டாத அமிர்தும்:
- ஆயுள்நாள் முழுவதுமே தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக் வேண்டிய வாடாத கற்பகப் பூச்செண்டும் எனப் புகழ்வள்.
- தேசிய வேண்டியூன் கவிப்பெருமை தினமும் கேட்பது என் செவிப் பெருமை என நாமக்கல்லார் பாராட்டுவார்.

### சிறப்புப் பெயர்கள்

- கவிமணி (சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் உமா மகேசுவரனார் சூட்டியது), குழந்தைக் கவிஞர், நாஞ்சில் நாட்டு கவிஞர், தழுவல் கவிஞர், சமுதாயக் கவிஞர், உணர்ச்சிக் கவிஞர், விடுதலைக் கவிஞர்.

**இவருடைய நூல்கள்**

- அழகம்மை, ஆசிரிய விருத்தம் (இவர் இயற்றி முதல் நூல்), காந்தளூர் சாலை, மலரும் மாலையும், ஆசியஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் (நகைச்சுவை நூல்).
- குழந்தைச் செல்வம், தேவியின் கீர்த்தனைகள், தீண்டாதார் விண்ணப்பம், கவிமணியின் உரைமணிகள், கதர் பிறந்த கதை.

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

- 4 எட்வின் ஆர்னால்ட் என்பவர் எழுதிய 'Light of Asia' என்ற நூலை தமிழில் 'ஆசியஜோதி' என மொழிபெயர்த்துள்ளார்.
- 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் எழுதிய பாடல்களை, தமிழில் 'ரூபாயத் என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

**பிற செய்திகள்**

- நாகர்கோவிலிலுள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்தார்.
- 1922-இல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார்.
- சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார்.
- கம்பராமாயணம், திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார்.

**பாராட்டுரைகள்**

- "இனிய தமிழில் எவரும் விளங்கப் பாடல் இயற்றும் திறம் மிக்கவர்" **- ரசிகமணி டி.கே.சி.**
- "விநாயகம் பிள்ளையின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம்; அரிய செல்வம், தெவிட்டாத அமிர்தம், ஆயுள் முழுவதும் தமிழ்மகன் தன்னுடன் அனைத்துக் கொண்டு அனுபவிக்கக் கூடிய வாடாத கற்பகப்பூச் செண்டு" **- ரசிகமணி டி.கே.சி.**
- "தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை" தினமும் கேட்பது என் செவிப் பெருமை" **- நாமக்கல் கவிஞர்**
- "கவிமணியின் கவிதைகளைப் புரிந்து கொள்வதற்குப் பண்டிதராக வேண்டியதில்லை; படிக்கத் தெரிந்த எவரும் பொருள் கொள்ளத் தக்க எளிய நடை" **- டி.கே. சண்முகம்**
- "போராட்டமும் பரபரப்பும் மிகுந்த காலத்தில் வாழ்ந்த போதிலும் அவருடைய உள்ளமும், கவிதைகளும் அமைதியும் இனிமையும் உடையனவாக விளங்கியது விந்தையே" **-டாக்டர் மு.வ.**

**"துரும்பென மெலிந்த தேகம், துலங்கிடும்**



TEACHER' S CARE ACADEMY

**குளிர்ந்த பார்வை, இருப்பினும் வலிய உள்ளம்,**

**இனியவே செய்யும் எண்ணம், பரம்பொருள்**

**நினைவே காட்டும் பாரெல்லாம் பரந்த நோக்கம்,**

**கரும்பினும் இனிய சொற்கள், கவிமணி வடிவமாகும்"**

**- நாமக்கல் கவிஞர்.**

**1. தேசிய விநாயகம் பிள்ளை**

- **கவிமணி எனப் பாடியவர், ஆசியஜோதி, உமர்கய்யாம் நூலிகளின் மொழி பெயர்ப்பாளர், மங்கையராய்ப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்ற கூற்றைப் பாடியவர். [26 Tamil Dec13, 2018 Paper 1, 2, with answer key]**

**2. கவிமணி ஆசிய ஜோதி என்ற நூலை இயற்றினார் [26 Tamil June 12, 2018 Paper 1, 2, with answer key (and) 2012 (same)]**

**3.** தேசிய விநாயகம் பிள்ளைக்கு கவிமணி என்ற பட்டம் வழங்கப்பெற்றது. 'மங்கையராய்ப் பிறப்பதற்கே – நல்ல மாதவம் செய்திடம் வேண்டும் அம்மா' என்று அவர் பாடினார். **[2014 வருடம் டிசம்பர்]**

## 1.2 நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

- நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை சேலம் மாவட்டத்தில் மோகனூர் என்னும் சிற்றூரில் 1888ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் தேதியன்று பிறந்தார்.
- தந்தை வெங்கடராம பிள்ளை, தாயார் அம்மிணி அம்மாள் 1906ஆம் ஆண்டில் நடந்த வங்கப்பிரிவினையும், அரவிந்தகோசின் நடவடிக்கைகளும் விபிபின் சந்திரபாலின் அரசியல் சொற்பொழிவுகளும் அவரை இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபடச் செய்தன.
- 'காங்கிரசுப்புலவன்' என்ற பட்டப் பெயரும் இவருக்குண்டு.
- தொடக்க காலத்தில் விடுதலை அடைய வன்முறையால் மட்டுமே இயலும் என்ற நம்பிய இராமலிங்கம் பிள்ளை பின்னாளில் காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையால் மட்டுமே நாடு விடுதலை அடையமுடியும் என்று கருதி உழைத்தவர்.
- இவரின் முதல் கவிதைத் தொகுதி 1922ஆம் ஆண்டில் 'வந்தே மாதரம் தேசிய பாட்டுகள் என்னும் பெயரில் வெளிவந்தன.
- அதன் பின்னர் 'நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் பெயரிலும் வெளியிடப்பட்டன.
- 'அவனும் அவளும்' என்ற நூல் இராமலிங்கம் பிள்ளை எழுதிய காப்பியமாகும்., 'சங்கொலி''தமிழ்த்தேர் 'தமிழன் இதயம்''கவிதாஞ்சலி''காந்தி அஞ்சலி' என்னும் வேறு கவிதை நூல்களும் வெளியாகியுள்ளன.
- 'காந்தி அஞ்சலி'யில் உள்ள சுவிதைகளே அவருக்குப் புகழை ஈட்டிக் கொடுத்தன.

**சுத்தியின்றி ரத்தமின்றி**
**யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை**

**நம்பும் யாரும் சேருவீர்!**

- இந்தப் பாடல் தான் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையைத் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகம் செய்து வைத்தது.
- "திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது;
- காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது" என்பார் இராஜாஜி.
- ஓவியக் கலைஞராய் இருந்து இலக்கியக் கலைஞராய்ப் பரிணமித்த இவர் **'தமிழனென்று சொல்லடா!**

**தலைநிமிர்ந்து நில்லடா'** எனக் குரல் கொடுத்தவர்.

**தமிழன் என்றொரு இனமுண்டு**
**தனியே அவர்க்கொரு குணமுண்டு**
**அமிழ்தம் அவனுடை மொழியாகும்.**
**அன்பே அவனுடை வழியாகும்"**

- எனத் தமிழனைப் பெருமையுடன் பாடியவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அரசவைக் கவிஞராய் இருந்து சிறப்பித்தவர். சட்டமேலவை உறுப்பினராகவும். சாகித்திய அகாதெமியின் உறுப்பினராகவும், நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்தவர். 1971இல் மைய அரசு கவிஞருக்கு 'பத்மபூஷண்' விருது வழங்கிச் சிறப்பித்தது. 1972 ஆகஸ்டு 24இல் நாமக்கல் கவிஞர் மரணமடைந்தார்.
- 'மலைக்கள்ளன், 'தாமரைக்கண்ணி''கற்பகவல்லி,''மரகதவல்லி''காதல் திருமணம்' போன்ற நாவல்களையும்:
- 'அரவணை சுந்தரம்: 'மாமன் மகள்' போன்ற நாடகங்களையும் நாமக்கல் கவிஞர் எழுதியுள்ளார்.
- 'திருவள்ளுவர் திடுக்கிடுவார்' 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்' 'திருவள்ளுவர் இன்பம்' 'வள்ளுவர் உள்ளம்,' 'இலக்கிய இன்பம்' 'கம்பரும் வால்மீகியும்' 'காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும்' போன்றவை அவரது திறனாய்வு நூல்களாகும்.
- 'என் கதை எனத் தன் வரலாறும் எழுதியுள்ளார்.
- 'அவளும் அவனும்;' 'அன்பு செய்த அற்புதம்' 'காந்தி சரித்திர நொண்டிச் சிந்து, 'விடுதலைக்கு விதை விதைத்த வீரர் கூட்டம்' 'நாட்டுக்கும்மி போன்ற சிறுகாப்பியங்களையும் படைத்துள்ளார்.
- 'காந்திய அரசியல்,' 'பஜகோவிந்தம்,' 'சாங்கிய யோகம்: 'வாக்குமூலம்' போன்றவை கவிஞரது மொழி பெயர்ப்பு நூல்களாகும்.
- சமயப் பொது நோக்கும் 'ஒரே கடவுள்' என்னும் உயரிய சிந்தனையையும் கொண்டவர் கவிஞர்.

**"அல்லா வென்பார் சிலபேர்கள்**
**அரன் அரி யென்பார் சிலபேர்கள்**
**வல்லான் அவன்பர மண்டலத்தில்**
**வாழும் தந்தை என்பார்கள்**

TEACHER' S CARE ACADEMY

- ❖ என்று அனைத்துச் சமயத்தினரும் வழிபடும் கடவுள் ஒன்றே நாமக்கல் கவிஞர் பாடியுள்ளார்.
- ❖ பிறந்த நாட்டில் பிறர்க்கு அடிமையாய் வாழ்வது வாழ்வல்ல அது தன்மானத்திற்கு இழுக்கு எனக் கருதியவர், நாமக்கல் கவிஞர்

**"இச்சைபோல் இருந்து வாழ**

**ஈ புழு எறும்பும் கோரும்;**

**உச்சமாம் மனித ஜென்மம்**

- ❖ என்று ஈ, புழு எறும்பிற்கு இருக்கும் சுதந்திரம் கூட புல்லடிமை மனிதனுக்கு இல்லாது போனது கண்டு பொருமினார் அவர்.
- ❖ சுதந்திரம் சமத்துவத்திற்கு வழிவகுக்கும். மக்கள் அனைவரும் நலமுடன் வாழ சமதர்ம சமுதாயம் காணவேண்டும் என்கிறார் நாமக்கல் கவிஞர்

**"அவரவர் உழைப்பின் பலன்களை முழுதும்**

**அவரவர் உரிமையால் அடைந்து**

**சுவையுள்ள வாழ்க்கைக் கவசியமான**

- ❖ என சமதர்ம சமுதாயத்திற்குச் சந்தமிகு இலக்கணம் வகுக்கிறார் அவர்.
- ❖ இனிய இசைப்பாடல்களைப் பாடி இசைத் தமிழிற்கு ஏற்றமிகு தொண்டு செய்தவர் நாமக்கல் கவிஞர்.

**"கொடிபறக்குது கொடிபறக்குது**

**கொடிபறக்குது பாரடா**

**கோணலற்ற கோலில் எங்கள்**

**கொடிபறக்குது பாரடா"**

**"ஆடுராட்டே சுழன் றாடுராட்டே**

**சுழன்று சுழன்று சுழன்றாடு ரலாட்டே - இனிச்**

**சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே"**

- ❖ போன்ற இசைப்பாடல்களில் எளிமையும், இனிமையையும் காணலாம்.
- ❖ 'தீண்டாமை' பற்றிக் கவிஞர் பாடிய பாடல் மிகவும் புகழ் பெற்றது.

**"ஓட்டடா! ஓட்டடா!**

**நாட்டை விட்டே ஓட்டடா!**

**தீட்டடா மனிதருக்குள்**

**தீண்ட லென்ற தீமையே**

- ❖ என தீண்டாமையைப் பேணுவது அறிவுடையோர் செயல் அல்ல என அறிவுரை பார்கிறார் நாமக்கல் கவிஞர்.
- ❖ அகிம்சாவாதியின் இலக்கணத்தையும் கவிஞர் பேசத் தவறவில்லை. பிறர் மனம் புண்படப் பேசமாட்டான், எழுதமாட்டான், நடக்கமாட்டான்; எல்லாச் செயல்களிலும் அறநெறியைக் கடைப்பிடிப்பான். கோபம் கொள்ளமாட்டான். வறியோரின் துயர் களைவான், ஆயுத பலத்தை நம்பான், ஆன்ம பலத்தை நம்புவான், வன்முறைப்

# COLLEGE TRB

# தமிழ்

2024-2025




TEACHER'S CARE PUBLICATION

38/23, Vaigundaperumal Koil Street,Kancheepuram- 631502

Mobile : 95665 35080, 9786269980 Land Line : 044-2723 5080


*Your Success is Our Goal...*

## UNIT-5

## நாடகங்கள், அயலகத் தமிழ் இலக்கியங்கள், தன் வரலாறுகள், பயண இலக்கியங்கள், வாழ்க்கை வரலாறுகள், கடித இலக்கியங்கள்


tcaexamguide@gmail.com

Teachers Care Academy

www.tcaexamguide.com

tcaexamguide

9360268118
7639967359
6369036346
9566535080

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ் அலகு -5



**COMPETITIVE EXAM**

**FOR**

# ASSISTANT PROFESSOR TRB 2024 - 25

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB-COMPUTER SCIENCE-TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359** **Salem: 93602 68118**


# COLLEGE TRB TAMIL

## அலகு 5


| S.NO | INDEX | PAGE NO |
|---|---|---|
| 5.1 | நாடகம் விளக்கம் | 1 |
| 5.1.1 | மனோன்மணீயம் | 17 |
| 5.1.2 | சங்கரதாஸ் சுவாமிகள் | 23 |
| 5.1.3 | பம்மல் சம்பந்த முதலியார் | 26 |
| 5.1.4 | பேரறிஞர் அண்ணா | 30 |
| 5.1.5 | கலைஞர் மு. கருணாநிதி | 36 |
| 5.1.6 | பி.எஸ்.ராமையா | 41 |
| 5.1.7 | சோ. ராமசாமி | 46 |
| 5.1.8 | கோமல் சுவாமிநாதன் | 50 |
| 5.1.9 | அறந்தை நாராயணன் | 54 |
| 5.1.10 | சுஜாதா | 57 |
| 5.1.11 | இந்திரா பார்த்தசாரதி | 59 |
| 5.1.12 | ஜெயந்தன் | 61 |
| 5.1.13 | கூத்துப்பட்டறை நா. முத்துசாமி | 65 |
| 5.1.14 | நிஜநாடக இயக்கம் மு.ராமசுவாமி | 66 |
| 5.1.15 | பரீக்ஷா – நாடகக் குழு – ஞாநி | 69 |
| 5.1.16 | சோ.ராமானுஜம் | 71 |
| 5.1.17 | இரா. பெருமாள் ராசு | 73 |
| 5.1.18 | கே.ஏ.குணசேகரன் | 75 |
| 5.1.19 | வ.ஆறுமுகம் | 76 |
| 5.1.20 | ச.முருகபூபதி | 77 |

TEACHER'S CARE ACADEMY



| | | |
|---|---|---|
| 5.2.1 | மறைமலையடிகளார் வாழ்க்கை | 81 |
| 5.2.2 | திரு.வி.க. | 95 |
| 5.2.3 | மயிலை சீனி வேங்கடசாமி | 107 |
| 5.2.4 | ரா.பி.சேதுப்பிள்ளை | 112 |
| 5.2.5 | வெ.சாமிநாத சர்மா | 114 |
| 5.2.6 | தந்தை பெரியார் | 120 |
| 5.3.1 | வ உ சிதம்பரனார் | 126 |
| 5.3.2 | உ.வே.சாமிநாதையர் | 135 |
| 5.3.3 | நாமக்கல் கவிஞர் | 139 |
| 5.3.4 | நெ. து. சுந்தரவடிவேலு | 141 |
| 5.3.5 | அப்துல் கலாம் | 149 |
| 5.4.1 | ஏ. கே. செட்டியார் | 166 |
| 5.4.2 | சோமலெ | 170 |
| 5.5.1 | வ.ராமசாமி | 185 |
| 5.5.2 | தொ.மு.சி. ரகுநாதன் | 191 |
| 5.5.3 | சிற்பி | 194 |
| 5.5.4 | தொ.மு.சி- பொன்னீலன் | 200 |
| 5.6.1 | மறைமலை அடிகள் | 207 |
| 5.6.2 | வ.சுப.மாணிக்கனார் | 219 |
| 5.6.3 | அண்ணாவின் கடிதங்கள் | 221 |
| 5.6.4 | சுத்தானந்த பாரதி | 223 |
| 5.6.5 | கா.ஶ்ரீ.ஸ் | 233 |
| 5.6.6 | த.நா.குமாரசாமி | 238 |
| 5.6.7 | த.நா.சேனாபதி | 246 |
| 5.6.8 | சரஸ்வதி ராம்நாத் | 250 |
| 5.6.9 | தி.ப.சித்திலங்கையா | 253 |
| 5.6.10 | A.A.மணவாளன் | 253 |
| 5.6.11 | மு.கு.ஜகந்நாதராஜா | 257 |
| 5.6.12 | நா.தர்மராஜ் | 259 |
| 5.6.13 | வெ.ஶ்ரீராம் | 265 |
| 5.6.14 | மணவைமுஸ்தபா | 268 |



TEACHER'S CARE ACADEMY

| | | |
|---|---|---|
| 5.6.15 | இந்திரன் | 274 |
| 5.6.16 | பா.ஆனந்தகுமார் | 280 |
| 5.6.17 | நா. சுகுமாரன் | 282 |
| 5.6.18 | புவியரசு | 286 |
| 5.6.19 | து.ரவிக்குமார் | 288 |
| 5.6.20 | குளச்சல் யூசுப் | 291 |
| 5.6.21 | சா.தேவதாஸ் | 293 |
| 5.6.22 | எம்.ஏ.சுசிலா | 297 |
| 5.6.23 | ஜி.குப்புசாமி | 302 |
| 5.7.1 | ஏ.கே.ராமானுஜன் | 305 |
| 5.7.2 | கபில் சுவலபில் | 307 |
| 5.7.3 | ம.இலெ.தங்கப்பா | 309 |
| 5.7.4 | A.தட்ணாமூர்த்தி | 316 |
| 5.7.5 | ஜார்ஜ் எல். ஹார்ட் | 319 |
| 5.7.6 | லக்ஷ்மி ஹோம்ஸ்ட்ரோம் | 320 |
| 5.7.7 | ப.மருதநாயகம் | 320 |
| 5.7.8 | வைதேகிஹெர்பர்ட் | 324 |
| 5.7.9 | கே.எஸ்.சுப்பிரமணியன் | 326 |
| 5.7.10 | சரஸ்பதி ராம்நாத் | 328 |
| 5.7.11 | நாகரத்தினம் கிருஷ்ணா | 330 |
| 5.7.12 | க.வாசுதேவன் | 331 |
| | பயிற்சி வினாக்கள் | 332 |


TEACHER'S CARE ACADEMY

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**

**TNPSC-TRB-COMPUTER SCIENCE-TET COACHING CENTER**

**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**

**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem**

**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# அலகு 5

## 5.1 நாடகம் விளக்கம்

- நாடகம் என்னும் சொல்லை நாடு + அகம் என இரு சொல்லாக்கிப் பார்ப்போம்.
- "நாடு" என்பது நாட்டில் வாழ்கின்ற மக்களைக் குறிக்கும். "அகம்" என்பது மக்களின் உள்ளங்களைக் குறிக்கும்.
- "மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஒரு கலை வடிவம் நாடகம்" என்னும் அளவில் இச்சொல் விளக்கம் பெறுகிறது.
- நாடு + அகம் என்பதை மாற்றி அகம்+நாடு என வைத்துப் பார்த்தாலும், 'அகத்தை நாடு', 'உள்ளத்தை நாடு' என்னும் பொருள் தருவதை உணரலாம்.
- நாடகம் என்னும் சொல்லைப் பகுத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்த நாடகக் கலைஞர் ஔவை தி.க. சண்முகம், பின்வருமாறு விளக்கம் தருகிறார்.
- 'நாடு + அகம்= நாடகம். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். அதாவது, நாட்டின் சென்ற காலத்தையும் நிகழ் காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு-அகம்-நாடகம் என்று பெயர் பெற்றிருக்கிறது. நாடு-அகம். அதாவது, அகம்-நாடு; உன்னுள் நோக்கு; உன்னை உணர்; அகத்தை நாடு என்றெல்லாம் பலவிதமாக அறிஞர்கள் இதற்குப் பொருள் கூறுவார்கள்' என்கிறார் தி.க. சண்முகம்.

### நாடகமும் விளையாட்டும்

- நாடகம், விளையாட்டு உணர்ச்சியில் இருந்து தோன்றியது என்பது பலர் கருத்து. இந்த விளையாட்டு உணர்ச்சி, கலையுணர்ச்சி மிக்கவர்களிடம் இருந்து ஒரு கலையாக மாறியது.
- மனிதர்கள் விளையாடிய விளையாட்டு மரப்பொம்மைகளின் விளையாட்டாகவும், தோல்பாவை விளையாட்டாகவும், நிழற்பாவை விளையாட்டாகவும் மாறியது. இவற்றை ஒவ்வொன்றாகச் சுருங்கிய நிலையில் அறிவோம்.

### பொம்மலாட்டம்

- மரத்தால் ஆகிய பொம்மைகளைக் கையில் பிடித்து இப்படியும் அப்படியும் நகர்த்துவர்; எதிரெதிராக இரு பொம்மைகளை மோதச் செய்வர்; இரண்டையும் அன்புடன்

நெருங்கச் செய்வர்; ஆரவாரத்துடன் குதிக்கச் செய்வர். இவ்வாறு பல வகைகளில் பொம்மை விளையாட்டை முதலில் காட்டினார்கள். இது **பொம்மலாட்டம் அல்லது மரப்பாவைக் கூத்து** எனப் பெயர் பெற்றது.

❖ மரத்தால் செய்த பொம்மைக்குப் பதிலாக மண்ணாலும் பழைய துணிகளாலும் பொம்மை செய்து செயற்கையாகக் கைகால்களைப் பொருத்தினார்கள். இப்பொம்மைகளின் கை கால்கள், கழுத்து முதலிய உறுப்புகள் அசையும் விதமாகக் கயிறுகளைக் கட்டி அக்கயிறுகளை இயக்கும் வேலையைக் கலைஞர்கள் தம் கைகளில் வைத்துக் கொண்டனர். தம் கைகளின் அசைவிலேயே பொம்மைகளின் அசைவுகளைக் காட்டினார்கள். இந்த விளையாட்டு **பொம்மலாட்டம்** எனப்பட்டது.



பொம்மலாட்டம்

### தோல்பாவைக் கூத்து

❖ மரப்பொம்மை, மண் பொம்மை செய்ததைப் போலவே விலங்குகளின் தோல்களைக் கொண்டும் உருவங்களை வடித்தனர். மென்மையான தோல்களின் மூலம் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் போன்ற உருவங்களைச் செய்தனர். இப்பொம்மைகள் வளைந்து நெளிந்து விடாமல் இருப்பதற்காக இவற்றை மூங்கில் தப்பை (சிறு குச்சிப்பட்டைகள்) களில் தைத்தனர். இந்தத் தோல் பாவைகளைக் கொண்டு விளையாட்டுக் காட்டினார்கள். இது **தோல்பாவைக் கூத்து** எனப்பட்டது.



தோல்பாவைக் கூத்து

### நிழற்பாவைக் கூத்து

❖ தோல் பாவைகளைப் பார்வையாளர்களுக்கு நேரடியாகக் காட்டாமல் வெள்ளைத் திரைச் சீலைகளுக்குப் பின்னால், ஒளிபொருந்திய விளக்குகளை வைத்து அவ்வொளியில் தோல்பாவைகளைக் காட்டினார்கள். இவ்வாறு காட்டும் போது, தோல் பாவைகளின் பிம்பம் தான் பார்வையாளர்களுக்குத் தெரியுமே தவிர நேரடியாகத் தோல் பாவைகளைப் பார்க்க முடியாது. இப்படிக் காட்டும் முறை தோல் பாவைக் கூத்து எனப்பட்டது.



நிழற்பாவைக் கூத்து

❖ தோல் பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியவற்றில் இராமாயணம், பாரதம் ஆகியவற்றில் இருந்து எடுக்கப்பட்ட கதை நிகழ்ச்சிகளும் சேர்த்துக் கூறப்பட்டன. இக்கதை நிகழ்ச்சிகள் பெருகப் பெருக நாடகத் தன்மையும் பெருகிக் கொண்டே வந்தது.

TEACHER'S CARE ACADEMY

**நாடக முன்னோட்டம்**

❖ மரப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியவை தாம் நாடக உருவாக்கத்துக்கு முன்னோடிக் கலைகளாக விளங்கின.

❖ பொம்மை மனிதன் இருந்த இடத்தில் உண்மை மனிதன் வந்தான்; பொம்மைகளுக்குச் செய்த ஒப்பனை உண்மை மனிதனுக்குச் செய்யப்பட்டது. பொம்மை விளையாட்டு நாடகவிளையாட்டாக மாறியது.

❖ இப்போதும் கூட நாடகத்தைத் தமிழ் நாட்டில் பல இடங்களில் விளையாட்டு என்று சொல்லும் பழக்கம் இருக்கிறது. ஆங்கிலத்திலும் கூட நாடகத்துக்குப் 'பிளே' (Play) என்னும் இன்னொரு சொல் உண்டு.

❖ விளையாட்டு நிலையில் தோன்றிய நாடகம் அறிவும் உணர்ச்சியும் சார்ந்த கலையாக மாறியது. அப்போது நாடகத்துக்கென்று கதை தேவைப்பட்டது.

❖ இந்திய நாடகங்களிலும், தமிழ் நாடகங்களிலும் தொடக்கத்தில் நாடகக் கதைகள் இராமாயணத்திலிருந்தும் மகாபாரதத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டன. காலம் செல்லச் செல்ல நாடகத்துக்கெனத் தனிக்கதைகள் உருவாயின.

❖ நாடகக் கதைகள் இன்பியலாகவும் துன்பியலாகவும் வடிவமைக்கப்பட்டன. இந்திய நாடகங்கள் அனைத்தும் இன்பியல் முடிவினைக் கொண்டவையாகவே விளங்கின. மேனாட்டு நாடகங்கள் பெரும்பாலும் துன்பியல் முடிவைக் கொண்டவையாக இருந்தன.

❖ இந்திய நாடக அமைப்பில் துன்பியல் முடிவு வந்தால்கூட அதை இன்பியலாக மாற்றி அமைக்கும் பண்பு காணப்பட்டது. எதுவும் சுபமாகவே முடிய வேண்டும் என்னும் இந்திய மனோபாவமே அதற்குக் காரணமாகும்.


**நாடகத் தோற்றம்**


❖ நாடகத்தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன. இங்கு, உலகில் நாடகம் தோன்றியது பற்றியும், இந்தியாவில் நாடகம் தோன்றியது பற்றியும் திராவிட மொழிகளில் நாடகம் தோன்றியது பற்றியும் பார்ப்போம்.

**சமயமும் நாடகமும்**

❖ சமயங்களை வளர்ப்பதற்கு நாடகங்கள் பெருமளவு துணைபுரிந்திருக்கின்றன. சமயக் கருத்துகளை வளர்க்கும் கருவியாக நாடகத்தைச் சமயத் தூதுவர்கள் கையாண்டனர்.

❖ ஜெர்மனி, ஜப்பான், கிரீஸ், இத்தாலி, பிரான்ஸ் முதலிய அனைத்து நாடுகளின் சமயப் பின்னணியில் நாடகமே முதன்மை வகிக்கிறது.





TEACHER'S CARE ACADEMY

- கிரேக்கத்தில் எலுகீனியன் மத விழாவில் ஆடிய நடனங்கள் நாடகக் கலையைத் தோற்றுவித்திருக்கின்றன.

**அரிஸ்ட்டோஃபேன்ஸ்**

**யூரிப்பிட்டீஸ்**

- கிரேக்க நாடக ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எஸ்கிலஸ், சோபக்ளீஸ், யூரிப்பிட்டீஸ், அரிஸ்ட்டோஃபேன்ஸ் ஆகிய நால்வருமாவர். கிரேக்க நாடக ஆசிரியர்கள் பெரும்பாலும் துன்பியல் நாடகங்களையே விரும்பி எழுதினர்.
- உரோம் நாட்டில் டிமிட்டஸ், பாக்கஸ் போன்ற தெய்வங்களுக்கு நடத்தப்பட்ட வழிபாட்டிலிருந்தே நாடகம் தோன்றி வளர்ந்தது.
- எகிப்தில் ஒசைரிஸ் என்ற கடவுளுக்குச் செய்யப்படும் வணக்கத்திலிருந்து நாடகம் தோன்றியது.

**நாடகத் தோற்றம் பற்றி அறிஞர்கள் கருத்து**

- நாடகத் தோற்றத்தில் சமயம் முதன்மைப் பங்கு வகித்தாலும் நாடக ஆய்வாளர்கள் சில மாற்றுக் கருத்துகளையும் முன் வைக்கின்றனர். நாட்டியத்திலிருந்து நாடகம் தோன்றியதாக ஹில்லே பிராண்ட் என்பவரும் ஸ்டென்கெனோ என்பவரும் கூறுகின்றனர்.
- 'ஆதிகால மனிதன் தன் மனமகிழ்ச்சியை இயற்கையான உடல் அசைவுகளின் மூலம் வெளிப்படுத்தினான். அதுவே பின்னர் நாடகமாக மாற்றமடைந்தது' என்று ஹில்லே பிராண்ட் கூறுகிறார்.

**உலகில் நாடகத்தோற்றம்**

- போலச் செய்தலின் கலை வெளிப்பாடான நாடகம், உலகின் பல பகுதிகளில் ஒரே காலத்தில் தோன்றியிருக்க வேண்டும்.
- நாடகம் இந்த நாட்டில்தான் முதலில் தோன்றியது என்று எந்த நாடும் தனி உரிமை கொள்ள முடியாது. காரணம், கலை உணர்ச்சியும், விளையாட்டு உணர்ச்சியும் மனித குலத்துக்குப் பொதுவானது.
- இருப்பினும் வடிவ அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் நாடகம் முதன்முதலில் எந்த நாட்டில் கட்டமைக்கப்பட்டது என்பதை அறியலாம்.
- நாடக ஆய்வாளர் தா.ப.சுப்பிரமணியன் என்பவர், எகிப்து நாட்டில்தான் நாடகம் முதலில் வடிவமைக்கப்பட்டது என்கிறார்.
- எகிப்தியப் பிரமிடுகளிலிருந்தும் சவக் கல்லறைகளிலிருந்தும் நாடகங்கள் இருந்ததற்கான 55 சான்றுகள் கிடைத்ததாக **மாஸ்பரோ** என்னும் நாடக ஆய்வாளர் கூறுகிறார். இவற்றின் காலம் கி.மு. 3000 ஆகும்.

TEACHER'S CARE ACADEMY

- எகிப்து மன்னர்களின் முடிசூட்டு விழாக்களின்போது, இந்த நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. நோயாளிகளைக் குணப்படுத்தும் சாந்திக் கூத்துகளாகவும் இவை நடிக்கப்பட்டன.

## இந்தியாவில் நாடகத் தோற்றம்

- உலக நாடுகளில் காணப்படுவதுபோல் இந்தியாவிலும் நாடகக்கலை தெய்வத்தொடர்பு உடையதாகவே காணப்படுகிறது. வட இந்தியர்கள் நாடகக் கலையின் தந்தையாகப் பரத முனிவரைக் குறிப்பிடுகின்றனர்.
- தேவர்களின் கண்களுக்குக் காட்சி விருந்து படைக்க வேண்டும் என்று தேவேந்திரன் கருதுகின்றான். படைப்புக் கடவுளான நான்முகனிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்கின்றான். நான்முகனும் **திரிபுரதகனம்** என்னும் நாடகத்தை அவர்களுக்காக உருவாக்குகின்றான்.
- அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் இடையே நடைபெறும் போரைச் சித்திரிப்பது **திரிபுரதகனம்**. இந்த நாடகத்தில் சிவபெருமான் திரிபுரத்தை எரித்து நடனமாடினார். இதைக் கண்குளிரக் கண்டுகளித்த பரதமுனிவர் உலக மக்களுக்காக அதைக் கொண்டு வந்தார் என்பது புராண வரலாறு.

## ஒரு மாற்றுக் கருத்து

- சமயப் பின்னணியிலேயே இந்திய நாடகம் விளக்கம் பெற்றாலும் ஒரு மாற்றுக் கருத்தை எண்ணிப் பார்க்கலாம்.
- மனிதர்களிடம் இயல்பாக நிறைந்திருக்கும் மகிழ்வுணர்ச்சியும், விளையாட்டு உணர்ச்சியும், போலச் செய்தல் உணர்ச்சியும் நடனமாகவும் நாடகமாகவும் மாறி வளர்ந்திருக்கலாம். இவ்வாறு எண்ணத் தூண்டுவதற்குரிய காரணங்கள் இரண்டு.
- மேலை நாட்டினைப்போல் இந்தியாவில் துன்பியல் நாடகத்துக்குத் தோற்றுவாய் இல்லை.
- இந்தியாவின் பல பகுதிகளில் உழைக்கும் மக்களின் பொழுதுபோக்கில் பிறந்த ஆடல் பாடல் ஆகியவையே இசைப்பாட்டு நடனங்களாக உருவெடுத்துள்ளன.

## இந்திய நாடகத் தோற்றப் பின்னணி

- அசாம் மாநிலத்தில் **அங்கிய நாடக்** என்னும் இசை நடனம் மகிழ்ச்சிப் பின்னணியை உடையது.
- **கீர்த்தன்ய நாடக்** என்னும் இசை நடனம் மெசில்லா என்னும் பகுதியில் வழக்கத்தில் இருந்திருக்கிறது.
- மணிப்பூரில் **மணிப்புரி** நடனம் வழக்கத்தில் இருக்கிறது.
- வங்காளத்தில் பல்வகை இசைப்பாட்டு நாடகங்களே தொடக்கத்தில் நடத்தப் பெற்றன. இன்றும் இசைப்பாட்டு நாடகங்கள் அங்கும் சிறப்புற நடத்தப்படுகின்றன.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- ஒரிசா மாநிலத்தில் பல பகுதிகளில், **ஜாத்திரா** என்னும் இசை நாடகம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.
- காஷ்மீர், பஞ்சாப், சிந்து, இராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் இசை நாடகங்களே நடத்தப்படுகின்றன.
- ஆந்திர மாநிலத்தில் வீதி நாடகமும், கர்நாடக மாநிலத்தில் யட்சகானமும், கேரளத்தில் கதகளியும், தமிழகத்தில் தெருக்கூத்தும் இசைப்பாட்டு நாடக வடிவங்களே ஆகும்.
- இவை அனைத்தும் எதைக் காட்டுகின்றன? நாடகத் தோற்றத்தில் தீவிரமான சமயப் பின்னணி உள்ளது என்பதைவிடவும் உழைப்பின் களைப்பைப் போக்கும் மகிழ்ச்சிப் பின்னணியே அதிகமாக இருக்கிறது என்பதைத் தானே காட்டுகின்றன.



**கதகளி**

**தமிழ் நாடகம்**

- தமிழ் நாடகத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. 2500 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலேயே நாடகம் பற்றிய குறிப்பு வருகிறது.

**"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்"**

- என்பது தொல்காப்பியம்.



**தெருக்கூத்து**

**தமிழ் நாடக இலக்கண நூல்கள்**

- நாடகம் என்பது வளர்ந்து வரும் ஒரு கலை. எந்த ஒரு கலையையும் திட்டமிட்டு வளர்க்க வேண்டுமானால் அக்கலை தொடர்பான கோட்பாடுகளை வளர்க்க வேண்டும். தமிழைப் பொறுத்தவரையில் தமிழ் நாடகக் கட்டமைப்பையும் ஒழுங்கு முறையையும் கூறும் நாடக இலக்கண நூல்கள் நிறைய உண்டு.
- **முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல்** ஆகிய நாடக இலக்கண நூல்கள் இருந்தமை பற்றிப் பழந்தமிழ் நூல்கள் சுட்டுகின்றன. சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் **பரதம், அகத்தியம்** ஆகிய இரண்டு நாடக இலக்கண நூல்களைச் சுட்டுகிறார்.
- பரிதிமாற் கலைஞர் என்னும் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் **நாடகவியல்** என்னும் நூலை எழுதினார். விபுலானந்த அடிகள் **மதங்க சூளாமணி** என்னும் நாடக ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். தமிழ் நாடக வளர்ச்சிக்கு இந்த ஆராய்ச்சி நூல்கள் பெருந்துணை புரிவனவாகும்.

**தமிழ் நாடகம் வளர்ச்சி நிலைகள்**

- தமிழ் நாடக வளர்ச்சி நிலைகளைச் சிலப்பதிகாரம் தான் முதன் முதலில் சுட்டிக் காட்டுகிறது. **வேத்தியல், பொதுவியல்** ஆகிய கூத்து வகைகளும் **அகக்கூத்து,**

**புறக்கூத்து** ஆகியனவும் மாதவி ஆடிய பல்வகைக் கூத்துகளும் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றன. தமிழ் நாடக வளர்ச்சியில் இது ஒரு நிலை.

- பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகிய அடிப்படைகளில் தமிழ் நாடகம் வளர்ச்சி அடைந்தது இன்னொரு நிலை.
- குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், விலாசம் எனக் கதைகளின் அடிப்படையில் நாடகம் வளர்ச்சி அடைந்தது மூன்றாம் நிலை.
- இவை அனைத்தும் அடிப்படையாகக் கொண்டும் வட இந்தியாவிலிருந்து புதிதாக வந்த நாடக அமைப்புகளையும் தழுவிப் புதிய நாடக அமைப்பைப் பெற்றது 19 ஆம் நூற்றாண்டு நிலை.

**புதுவகை நாடகங்கள்**

- நாடகம் ஒரு கலை வடிவம்; குறிப்பிட்ட பண்பாட்டின் அழகியல் வெளியீடு; சமூகச் சிந்தனைகளின் வெளிப்பாட்டு ஊடகம். இந்த மூன்றின் சேர்க்கையாகத் தமிழ் நாடகம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவானது.
- தமிழில் வெளிவந்த முதல் சமுதாய நாடகம் **டம்பாச்சாரி விலாசம்** இதன் ஆசிரியர் **காசி விசுவநாத முதலியார்**. இவர், **பிரம்ம சமாஜ நாடகம்; தாசில்தார் நாடகம்** என மேலும் இரு நாடகங்களை எழுதி மேடையேற்றினார்.
- காசி விசுவநாத முதலியாரைத் தொடர்ந்து **ராமசாமி ராஜா** என்பவர் **பிரதாப சந்திர விலாசம்** என்னும் நாடகத்தை 1877ஆம் ஆண்டு எழுதி அரங்கேற்றினார். இவர்களைத் தொடர்ந்து பலர் பல நாடகங்களை எழுதி அரங்கேற்றினர்.
- இந்த நாடகங்களிலெல்லாம் நாடகக் கதையை முதலில் பாடலாகப் பாடுவர். பின்னர் அப்பாடலை உரைநடையால் விளக்கிக் காட்டுவர். இவ்வாறு பாடும்போதும் பேசும்போதும் நடிகர்கள் தங்கள் மனப்போக்கிற்கேற்பப் பாடலையும் வசனங்களையும் கூட்டிக் குறைத்துப் பாடினர். பேசினர். சில, புதிய நாடக சபைகளின் வருகையால் இக்குறைபாடுகள் நீங்கின.

**சாங்கிலி நாடக சபையும் பார்சி கம்பெனியும்**

- 1875ஆம் ஆண்டு வாக்கில் சென்னையை நோக்கி இரண்டு புதிய நாடகக் கம்பெனிகள் வந்தன.

  1)சாங்கிலி நாடக சபை

  2) பார்சி நாடகக் கம்பெனி

- சாங்கிலி நாடக சபை பூனாவிலிருந்து சென்னைக்கு வந்தது. சென்னை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இவர்கள் நாடகங்கள் நடத்தினர். நாடகம் தொடங்குமுன், விநாயகர், சரஸ்வதி ஆகியோருக்குப் பூஜை செய்துவிட்டு, சூத்திரதாரனும் விதூஷகனும் நாடகக் கதையைச் சுருக்கமாகச் சபையினர்க்கு எடுத்துக் கூறும் வழக்கம் இச்சபையினரால் ஏற்பட்டது.
- பார்சி நாடகக் கம்பெனியால், நாடகத் திரைச் சீலைகளை அமைப்பதில் புதிய மாற்றம் ஏற்பட்டது.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

❖ இந்த மாற்றங்களை எல்லாம் மனத்தில் கொண்டு புதுமுறையில் நாடகங்கள் நடத்தி வெற்றி கண்டவர் **கோவிந்தசாமி ராவ்** என்பவராவார். தமிழ் நாடகம் புத்துயிர் பெற்றதில் இவர் பங்கு கூடுதலானது ஆகும்.

**அமெச்சூர் நாடகச் சபைகள்**

❖ அமெச்சூர் நாடக சபைகள் தோன்றிய பின்னர் தமிழ் நாடக உலகில் மீண்டும் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. 1891 ஆம் ஆண்டு **சுகுணவிலாச சபை** என்னும் அமெச்சூர் நாடக சபை முதலில் தொடங்கப்பட்டது. அதன் பின்னர், பல சபைகள் தோன்றின. பல புராண, இதிகாச, சமூக நாடகங்கள் தமிழ் நாட்டு நாடக மேடைகளில் அரங்கேறின.

**நாடகத்தின் வகைகள்**

**நாடகமும் கூத்தும்**

❖ உலக நாடகங்களை ஆராய்ச்சி செய்தவர்கள் இருபெரும் பிரிவுகளில் நாடகங்களை அடக்கிக் காட்டுவர். அவை,

1. **இன்பியல் நாடகங்கள்**
2. **துன்பியல் நாடகங்கள்**

❖ மகிழ்ச்சியான நிலையில் நாடகம் முடிவுற்றால் **இன்பியல் நாடகம்** என்றும் துயர முடிவைக் கொண்டிருந்தால் **துன்பியல் நாடகம்** என்றும் நாடகங்களைப் பிரித்துக் காட்டினர்.

❖ தமிழ் நாடகங்களிலும் பிற இந்திய மொழி நாடகங்களிலும் **துன்பியல் முடிவு** என்பது விரும்பி ஏற்றுக் கொண்ட ஒன்று அன்று. இந்திய நாடகங்கள் பெரும்பாலும் **இன்பியல் முடிவை**க் கொண்டவையாகவே இருக்கும். இருபதாம் நூற்றாண்டில் மேனாட்டு நாடகச் செல்வாக்கு இந்தியாவில் ஏற்பட்ட பின்னர்தான் துன்பியல் முடிவுகள் நாடகங்களில் பரவின.

**பழைய நாடக வகைகள்**

❖ பழைய தமிழ் நாடகங்களும் இருபதாம் நூற்றாண்டு நாடகங்களும் வேறு வகையான பிரிவுகளைக் கொண்டிருந்தன. தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரையில் பழந்தமிழ் உரையாசிரியர்கள் பின்வருமாறு வகைப்படுத்தினர். அவை,

1. வேத்தியல்
2. பொதுவியல்

❖ அரசர்களும் அரசர்களை ஒத்த பெரியவர்களும் காணும் நாடக வகை **வேத்தியல்**. பொதுமக்கள் காண்பதற்குரிய நாடக வகை **பொதுவியல்**.

❖ இந்த நாடகம் அல்லது கூத்து வகைகளை இன்னும் நுட்பமாகச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பகுத்துக் காட்டுகிறார்.

- வசைக் கூத்து -புகழ்க் கூத்து
- வரிக் கூத்து - வரிசாந்திக் கூத்து
- சாந்திக் கூத்து - விநோதக் கூத்து

- ஆரியக் கூத்து - தமிழ்க் கூத்து
- இயல்புக் கூத்து - தேசிக்கூத்து

❖ என்பன அடியார்க்கு நல்லார் வகைப்படுத்தும் பத்துக் கூத்து வகைகள்.

**இருபதாம் நூற்றாண்டு நாடக வகைகள்**

❖ மேடை நாடகமே தம் வாழ்வின் பெரும்பணி என்று செயல்பட்டவர் அவ்வை தி.க. சண்முகம். அவர், மேடை நாடகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் எனக் கூறுகிறார்.

❖ "தமிழ் நாடகங்களைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம். **புராண நாடகம், பக்தி இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், கற்பனை நாடகம், பக்தி இலக்கிய நாடகம், சமுதாய நாடகம், சமுதாயச் சீர்திருத்த நாடகம், தேசிய நாடகம், நகைச்சுவை நாடகம்** என நாடகங்களை இவ்வாறு பலவகைப்படுத்திப் பார்க்க வேண்டும். இந்த நாடகங்களோடு பிரச்சார நாடகம் என்னும் ஒரு பிரிவையும் சேர்த்துக் கொள்ளலாம்" என்று கூறுகிறார்.

**1. புராண நாடகம்**

❖ **சிவலீலா, கிருஷ்ணலீலா, சக்திலீலா, மகாபாரதம்** போன்றவை புராண இதிகாச நாடகங்கள்.

**2. வரலாற்று நாடகம்**

❖ **இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன், தஞ்சை நாயக்கர் தாழ்வு, இமயத்தில் நாம்** போன்றவை வரலாற்று நாடகங்கள்.

**3. கற்பனை நாடகம்**

**இரண்டு நண்பர்கள், லீலாவதி, சுலோசனா, வேதாள உலகம்** போன்றவை கற்பனை நாடகங்கள்.

**4. பக்தி நாடகம்**

❖ **நந்தனார், சிறுத்தொண்டர், பிரகலாதன், மார்க்கண்டேயர்** போன்றவை பக்தி நாடகங்கள்.

**5. சமுதாய நாடகம்**

❖ **உயிரோவியம், வேலைக்காரி, நாலுவேலி நிலம், டம்பாச்சாரி விலாசம்** போன்றவை சமுதாய நாடகங்கள்.

**6. சீர்திருத்த நாடகம்**

❖ **அந்தமான் கைதி, இரத்தக் கண்ணீர், இழந்த காதல், வாழ்வில் இன்பம்** போன்றவை சமுதாயச் சீர்திருத்த நாடகங்கள்.

**7. நகைச்சுவை நாடகம்**

❖ **சபாபதி, பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், துப்பறியும் சாம்பு, ஒரு சொந்த வீடு வாடகை வீடாகிறது** போன்றவை நகைச்சுவை நாடகங்கள்.

TEACHER'S CARE ACADEMY

**8. பிரச்சார நாடகம்**

- **பதிபக்தி, ஐம்பதும் அறுபதும், விலங்கு மனிதன், காகிதப் பூ** போன்றவை பிரசார நாடகங்கள்.

**இலக்கிய நாடக வகைகள்**

- மேடையில் நடிக்கப்பெறும் நாடகங்களை வகைப்படுத்துவதைப் போல் இலக்கியமாக எழுதப்பெறும் நாடகங்களை இருவகையில் பிரிக்கலாம். அவை,

  1) உரைநடை நாடகங்கள்

  2) செய்யுள் நாடகங்கள்

- இந்த இருவகை நாடகங்களும் நடிப்பதற்கும் படிப்பதற்குமாக எழுதப்படும் நாடகங்களாகும்.
- காட்சி அமைப்பையும் காண்போரையும் மனத்துள் கொள்ளாமல் மொழிநடைக்கும் கருத்துக்கும் மட்டுமே முன்னுரிமை தந்து எழுதப் பெறும் நாடகங்களை அரங்கேற்ற முடியாது. இவற்றைப் படித்து மட்டுமே இன்புறலாம்.
- மொழிநடைக்கும் முதன்மை தந்து, காட்சி அமைப்பையும் முன்னிறுத்தி எழுதப்படும் நாடகங்களைக் கண்டு மகிழ்வதுடன் கற்றும் மகிழலாம்.

**நாடகங்களின் புதிய வகைப்பாடுகள்**

- மேற்குறிப்பிட்டவைகளைத் தவிரவும், நாடகங்களை ஆய்வு செய்த பேராசிரியர்கள் மேலும் பல பிரிவுகளைக் குறிக்கின்றனர்.

**பின்புல நிலையில் நாடக வகைகள்**

- நாடக ஆக்கத்துக்குரிய கருத்துப் பின்புலம், மேடைப் பின்புலம், அமைப்புப் பின்புலம், மொழிப் பின்புலம் போன்றவற்றை எல்லாம் மனம் கொண்டு நாடக ஆய்வாளர்கள் நாடகங்களை வகைப்படுத்துகின்றனர்.
- பேராசிரியர் ஆறு. அழகப்பன் பின்வரும் வகைகளைத் தருகிறார். அவை:

| | |
|---|---|
| 1) தெருக்கூத்து | 2) குழந்தை நாடகம் |
| 3) வானொலி நாடகம் | 4) மொழிபெயர்ப்பு நாடகம் |
| 5) மேடை நாடகம் | 6) அமெச்சூர் நாடகம் |
| 7) தேசிய நாடகம் | 8) ஓரங்க நாடகம் |
| 9) செய்யுள் நாடகம் | 10) ஒளி நாடகம் |

- எனப் பத்து வகையாகத் தமிழ் நாடகங்களைப் பிரிக்கிறார். இந்த ஒவ்வொரு நாடக வகையிலும் உள்ளே அமையும் சிறு சிறு வகைகளையும் அவர் குறிக்கிறார்.

○ பேராசிரியர் ஆறு. அழகப்பன் நாடகங்களை வகைப்படுத்துவதைப் போல் பேராசிரியர் ஏ.என்.பெருமாள் இலக்கிய நிலையில் நாடகங்களை வகைப்படுத்துகிறார். அவை:

  1) பாடல் நாடகங்கள்

  2) பாடல் உரைநடை நாடகங்கள்

  3) உரைநடை நாடகங்கள்

TEACHER'S CARE ACADEMY

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

4) கவிதை நாடகங்கள்

5) உரைநடை கலந்த கவிதை நாடகங்கள்

- என ஐந்தாக வகைப்படுத்துகிறார்.
- பாடல் நாடகங்கள் என்று அவர் குறிப்பிடுவது இசைப்பாட்டு நாடகங்களையே ஆகும். ஆங்கிலத்தில் இவ்வகை நாடகங்களை **ஆபெரா (Opera)** என்று குறிப்பிடுவர். பதினெட்டாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடிக்கப் பெற்ற நாடகங்கள் இசைப்பாடல் வடிவிலேயே அமைந்திருந்ததால் **பாடல் நாடகங்கள்** என்று பகுத்துள்ளார்.
- இசைப்பாட்டு நாடகங்களில் சிறிது சிறிது உரைநடை இடம் பெற்ற நிலையில் அவை, **பாடல் உரைநடை நாடக** வகைக்கு உள்ளாயிற்று.
- இசைப்பாடல், உரைநடை என்னும் கலப்பு நீங்கி முழுவதும் உரைநடையாகவே அமைந்த நாடகங்கள் பிற்காலத்தில் தோன்றின. இவ்வகை நாடகத்தைத் தோற்றுவித்த பெருமை பம்மல் சம்பந்த முதலியாரைச் சாரும். அவரால் 1891 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட புஷ்பவல்லி என்னும் நாடகம் முழுமையாக உரைநடையில் தோன்றிய முதல் உரையாடல் நாடகமாகும். தமிழில் தோன்றிய உரைநடை நாடகங்களில் மிகுந்த புகழ்பெற்றவையாக இராஜராஜ சோழன், வீரசுதந்திரம், பூவுக்குள் பூகம்பம், ஊஞ்சல் மனம் எனப் பல நாடகங்கள் திகழ்கின்றன.

**வடிவ நிலையில் நாடக வகைகள்**

- நாடகங்களின் அமைப்பு அல்லது வடிவம் என்னும் அடிப்படையிலும் நாடகங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. வடிவ நிலையில் நாடகங்களை மூன்று வகையில் பகுத்துள்ளனர்.
- பொதுவாக நாடகங்கள் பலவிதமான அளவுகளைக் கொண்டு விளங்குகின்றன. நாடகக் கதைக் கருவுக்கேற்ப இந்த அளவுகள் வேறுபடுகின்றன.

**1. ஓரங்க நாடகம்**

- ஒரு சில நிகழ்ச்சியை அல்லது உணர்வை ஒரு சில களங்களில் முழுமைப்படுத்திக் காட்டுவதை **ஓரங்க நாடகம்** என்பர்.

**2. குறு நாடகம்**

- **குறுநாடகம்** என்பது **ஓரங்க நாடகத்**தை விடச் சற்றுப் பெரியது. இந்த நாடகம் நடைபெறும் கால அளவு ஒரு மணி நேரத்திலிருந்து ஒன்றரை மணி நேரம் வரை இருக்கும்.
- நாடக உருவாக்கத்துக்கு மையமாக அமையும் கருத்துடன் சில துணைக் கருத்துகளும் **குறுநாடக**த்தில் இடம் பெறும்.

**3. ஓரங்க நாடகமும் குறு நாடகமும்**

- ஓரங்க நாடகம் **சிறுகதை** போன்றது; குறுநாடகம் **குறும்புதினம்** போன்றது; பெருநாடகம் **புதினம்** போன்றது.

**4. நீள நாடகம்**

- பெருநாடகத்தை **முழு நீள நாடகம்** என்றும் கூறுவர். இவ்வகை நாடகத்தில் கால அளவு இரண்டுமணி நேரத்திலிருந்து மூன்றரை மணிநேரம் வரை அமையும்.

TEACHER'S CARE ACADEMY

TEACHER'S CARE ACADEMY

- ❖ நாடகத்தின் மையக் கருத்தை நிலைநாட்டுவதற்காகக் கிளைக் கருத்தும் துணைக்கருத்தும் பெருநாடகத்தில் அமையும். அங்கம், காட்சி, காலங்கள் என்னும் நிலைகளில் நாடகம் விரிவாக்கம் பெறும்.
- ❖ ஓரங்க நாடகம், குறுநாடகம், பெருநாடகம் ஆகியன நடிப்பின் கால அளவைக் கொண்டும் அமைப்புக் கூறுகளைக் கொண்டும் பகுத்தறியப் படுகின்றன.

**உணர்ச்சிக் கூறுகளும் நாடக வகைகளும்**

- ❖ மனித குலத்தின் அனைத்து வகையான உணர்ச்சிக் கூறுகளும் கலக்கும் இடம் நாடகமாகும். பாத்திரப் படைப்பின் வழியாகவும் கதை அமைப்பின் வழியாகவும் எட்டுவகை மெய்ப்பாடுகளும் உணர்ச்சிகளும் நாடகத்தில் ஒன்று சேர்ந்து காண்போரை மகிழ்விக்கின்றது. இத்தகைய உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டும் நாடகங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு:

    1) வேக உணர்ச்சி நாடகம் (Melodrama)
    2) துப்பறியும் நாடகம் (Detective Plays)
    3) மணவினை நாடகம் (Wedding Masque)
    4) உளவியல் நாடகம் (Psychological plays)
    5) அங்கத நாடகம் (Satirical Plays)
    6) நையாண்டி நாடகம் (Burlesque)
    7) கேலிக் கூத்து நாடகம் (Farce)

- ❖ ஆகியன உணர்ச்சிக்கூறு நாடக வகையுள் அடங்கும்.
- ❖ நாடகங்களைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்தினாலும் அவை,

    1) இன்பியல் நாடகம்
    2) துன்பியல் நாடகம்

- ❖ என்னும் இரு பெரிய வகையுள் முழுமை பெற்று விடும்.

**நாடக வகைகளின் எடுத்துக்காட்டுகள்**

- ❖ முன்னர் விளக்கிக் காட்டப்பட்டுள்ள நாடக வகைகள் அனைத்துக்கும் எடுத்துக் காட்டுகளை அளித்தால் இக்கட்டுரை மிகவும் விரிந்து விடும். எனவே முக்கியமான சிலவற்றுக்கு மட்டும் எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

**இன்பியல் நாடகம்**

- ❖ நாடகத்தின் முடிவு மகிழ்ச்சியாகவோ இன்பமாகவோ கொண்டு முடிவது **இன்பியல் நாடக**மாகும். பல சோதனைகளைக் கடந்து இறுதியில் மன்னன் மணிமுடி சூடுவதாகவோ, பல இன்னல்களைக் கடந்து காதலர்கள் தம் காதலில் வெற்றி பெறுவதாகவோ, மக்களுக்காகப் போராடும் தலைவன் தோல்விகளை மீறி இறுதியில் வெற்றி பெறுவதாகவோ காட்டுவது **இன்பியல் நாடகமாகும்**.
- ❖ பொதுவாக இந்திய நாடகங்களுக்குத் துன்பியல் முடிவு இல்லை. துன்பமே முடிவாக அமையும் என்றால்கூட நாடக இறுதியில் தலைமைக் கதைமாந்தர்க்கு **மோட்சம்** தந்து இன்பியலாக்குவது இந்திய நாடக மரபு.

- **வாலி மோட்சம், கர்ண மோட்சம்** போன்ற புராணப் பின்னணி நாடகங்கள் இன்பியலாகவே முடிவு பெறுகின்றன. தமிழ்ச் சூழ்நிலையில் உருவான நொண்டி நாடகம் இன்பியலாகவே முடிவுறுகிறது.

**துன்பியல் நாடகம்**

- **துன்பியல் நாடக** அமைப்பு தமிழில் மட்டுமல்லாமல் இந்திய நாடக வரலாற்றில் கூடப் புதுமையான ஒன்றாகும். மேலைநாட்டு நாடகச் செல்வாக்கினால் தமிழில் முழுத் துன்பியல் நாடகம் உருவானது. அதுவரை தமிழில் இருந்த நாடக மரபும் துன்பியலுக்கேற்ப நெகிழ்வடைந்தது.
- தமிழில் உருவான முதல் துன்பியல் நாடகமாக, **கள்வர் தலைவன்** என்னும் நாடகம் கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். **நல்லவர் நலிவு, தீயவர் வெற்றி, இன்பத்தின் வீழ்ச்சி, துன்பத்தின் எழுச்சி, நன்மையின் தோல்வி, தீமையின் வெற்றி, இரக்கத்தின் இழிவு, அரக்க குணத்தின் மேன்மை** என்னும் முரண்களின் முழு வெளிப்பாடாக இந்த நாடகம் அமைந்துள்ளது. நாடகத்தில் சாவுகளின் எண்ணிக்கையை மிகுதியாகக் கொண்ட இந்த நாடகம் 1894 ஆம் ஆண்டு எழுதி நடிக்கப்பட்டது.
- பம்மல் சம்பந்த முதலியாரைப் பின்பற்றிப் பல நாடகாசிரியர்கள் துன்பியல் நாடகங்களை எழுதினர். B.பழனி எழுதிய **அனிச்ச அடி** அருமையான துன்பியல் நாடகமாகும். அரங்கசாமி எழுதிய **கனகை** அவலம் பொதிந்த நாடகம். சூ.இன்னாசி எழுதிய **தேசத் தியாகி** நல்ல உள்ளம் கொண்டவரின் மரணத்தைச் சுட்டும் அவல நாடகம். ஏ.என். பெருமாள் எழுதிய **பனிமொழி** என்னும் கவிதை நாடகம் பெண்ணின் தியாகத்தைச் சுட்டும் அவல நாடகம்.

**இசைப்பாட்டு நாடகங்கள்**

- தமிழில் 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் உருவான நாடகங்கள் அனைத்தும் **பாடல் நாடகங்க**ளே ஆகும். பாடல் நாடகங்களை **இசைப்பாட்டு நாடக**ங்கள் என்றும் கூறுவர். இவ்வகை நாடகங்களில் உரைநடைப் பேச்சு மிகமிகக் குறைந்து இருக்கும்.
- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகம், **மேடை அமைப்பு சார் கலை**யாக மாறத் தொடங்கிய போது, **இசைப்பாட்டு நாடகம்** குறையத் தொடங்கியது. காலப் போக்கில் நாட்டுப்புறச் சிற்றூர்களில் மட்டும் இத்தகைய நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன.
- **அரிச்சந்திரன் நாடகம், பிரகலாதன் நாடகம், திரௌபதி வஸ்திராபஹரணம்** மற்றும் காசி விசுவநாத முதலியாரின் **டம்பாச்சாரி விலாசம்** ஆகிய நாடகங்கள் இசைப்பாட்டு நாடகங்களே ஆகும்.

**இசைப்பாட்டு உரைநடை நாடகங்கள்**

- மொழியில் உரைநடைப் பயன்பாடு வளர வளர, நாடகத்திலும் அவை இடம்பெறத் தொடங்கின. காலப்போக்கில் இசைப் பாடல்களே மறைந்து போகும் அளவுக்கு உரைநடை முழுவதுமாக நாடகத்தில் இடம் பெற்றது. ஆனாலும் இசைப்பாடல் வழியாக நாடகத்தை நடித்துப் பழகிய கலைஞர்கள் எளிதில் இசைப்பாட்டை விட

TEACHER'S CARE ACADEMY

முடியாது தவித்தனர். எனவே **இசைப்பாட்டு, உரைநடை** என்ற இரண்டின் கலவையாக நாடகம் உருவாயின.

- 1877 ஆம் ஆண்டு தி. இராமசாமி ராஜூ என்பவர் எழுதிய **பிரதாபச் சந்திர விலாசம்** என்னும் நாடகம் உரைநடையும் பாடலும் கலந்து எழுதியதாகும். சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய **வள்ளி திருமணம், கோவலன் நாடகம், சதி அனுசூயா, பிரகலாதா** ஆகிய நாடகங்களும் இவ்வாறு உருவானவையே ஆகும்.

**உரைநடை நாடகங்கள்**

- கதை மாந்தர்களின் உரையாடல், எதிர் உரையாடல் ஆகியவற்றில் இசைப்பாடலே கலவாமல் முழுக்க முழுக்க உரைநடை மட்டுமே அமைந்த நாடகங்கள் **உரைநடை நாடகங்கள்** ஆகும். பம்மல் சம்பந்த முதலியார் 1891 ஆம் ஆண்டு எழுதிய **புஷ்பவல்லி** என்னும் நாடகம் உரைநடை நாடகம் ஆகும். தமிழில் இப்போது ஆயிரக்கணக்கான உரைநடை நாடகங்கள் உள்ளன.
- இசைப் பாட்டுக்களையே கேட்டு மகிழ்ந்த இரசிகர்களை மகிழ்விப்பதற்காகச் சில பாடல்கள் மட்டும் உரைநடை நாடகங்களில் சேர்க்கப்பட்டன.

**கவிதை நாடகங்கள்**

- உரையாடல், எதிர் உரையாடல் என அனைத்தும் கவிதையிலேயே அமைந்து உருவான நாடகம் **கவிதை நாடகமா**கும்.
- **கவிதை நாடகம்** யாப்பு நெறிகளுக்குக் கட்டுப்பட்டது; செய்யுள் வடிவில் அமைந்தது. கவிதை வகை நாடகங்களும் மேலை நாட்டு நாடக வகையைப் பின்பற்றி எழுந்தனவே ஆகும்.



பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

- தமிழில் எழுந்த முதல் கவிதை நாடகம் **மனோன்மணீயமா**கும். இதை எழுதியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆவார். 1891 ஆம் ஆண்டு இந்த நாடகம் எழுதப்பட்டது. சுந்தரம் பிள்ளையைத் தொடர்ந்து பலர் கவிதை நாடகங்களை எழுதினர். **மறைந்த மாநகர், புகழேந்தி, புலவர் உள்ளம், அன்னி மிஞிலி** எனப் பல கவிதை நாடகங்கள் தமிழில் வெளிவந்துள்ளன.
- தமிழ் இலக்கியச் செய்திகளும், தமிழக வரலாற்றுச் செய்திகளும் கவிதை நாடக ஆசிரியர்களுக்குக் கருப்பொருள் ஆகின.
- **கனகை, புகழேந்தி, அனிச்ச அடி, ஆபுத்திரன், வேங்கையின் வேந்தன், நெடுமான் அஞ்சி, இரவிவர்மன், இராஜாதேசிங்கு, சாகுந்தலை, தமயந்தி** போன்ற கவிதை நாடகங்கள் இலக்கியம் மற்றும் வரலாற்றுப் பின்புலங்களிலிருந்து உருவானவையாகும்.

**உரைநடைக் கலப்பு**

- இசைப்பாட்டு நாடகத்தில் சிற்சில இடங்களில் உரைநடை கலப்பதைப் போல் கவிதை நாடகத்தில் உரைநடை கலப்பதும் உண்டு. இந்த உரைநடை கதைமாந்தர் தன்மைக்கேற்பவும் நாடகாசிரியரின் தேவைக்கேற்பவும் இடம் பெறும். பேராசிரியர் க.

TEACHER'S CARE ACADEMY




Teachers care Academy is the foremost coaching Institution for various competitive examinations such as P.G.TRB, TET Papers I &II TNPSC including special Teachers Eligibility Test. The Academy was established on 5th April 2013 by learned energetic and multifaceted chairperson Mrs. RAVIMAGESHWARI in the holy temple town of Kanchipuram.

# Our Other Competitive Exam. Guides

- PG-TRB (Tamil, English, Mathematics, History, Physics, Chemistry, Commerce, Economics, Botany, Zoology)
- Polytechnic-TRB (English, Mathematics, Physics, Chemistry, CSE, ECE, Civil, EEE, Mech)
- Computer Instructor Grade-1
- Block Educational Officer
- Teachers Eligibility Test (TET Paper-1 & Paper-2) & UG-TRB
- TNEB – Assessor
- Tamil Nadu – Forest Guard
- TNPSC ( Group-1, Group-2, Group-3, Group-4)
- NEET

*Your Success is Our Goal....*


Teachers Care Academy

tcaexamguide

tcaexamguide@gmail.com

www.tcaexamguide.com



**Teachers Care Publication**

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1

Mobile : 95665 35080, 97862 69980

Help Line Numbers : 9360268118 7639967359

1st Edition